ஆண்டு 26 - 160
சுபகிருது - ஆனி

# அருவியூர் நகரத்தார் குரல்

திங்கள் இரண்டுக்கு ஒன்று
கல்வி பண்பாடு வளர்ச்சி இதழ்

ஜூலை 2022

## நானறிந்த உலகமான என் செல்விக்கு

### ஆறாம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம்:
25.10.1972

மறைவு:
16.08.2016



**திருமதி. தி.செல்வி ஆச்சி**

உலகே அழிந்தாலும் உன்
உருவம் அழியாதே! உயிரே
பிரிஞ்சாலும் உறவேதும் பிரியாதே!
உன்னால் தவிக்கும்...



என்றும் உன் உயிர் **N.திருஞானம்**
13வது வார்டு கவுன்சிலர்

திருஞானம் சூப்பர் மளிகைக்கடை & FABRIC WING மொத்தவிலை ஜவுளிக்கடை
நாட்டுக்கல், பொன்னமராவதி.

வெளியீடு
அருவியூர் வடக்கு வளவு நகரத்தார்
கல்வி வளர்ச்சிக் கழகம் (பதிவு)
பிரான்மலை.



**Guruji.S.RAJAKUMAR**
Business Consultants
Devotional Advisor
+91 944 348 0007

#7, LIGHT HOUSE COMPLEX,
FOUR ROADS, SALEM - 636 009.
CELL : 98427 10545, 93677 10545

3A SANNITHANAM, P54 'VISAKA',
6TH AVENUE, ANNA NAGAR,
CHENNAI - 600 040.
Cell: 81444 10545

WOODLAND CIRCLE,
5, RAJA RAM MOHAN ROY ROAD,
RICHMOND CIRCLE,
BENGALURU - 560 025.
CELL : 90350 10545

**MAHILVITHU MAHIL®**
**MAHA SANNITHANAM**

gurusaranam5@gmail.com | www.mahilvithumahil.com | Google Play: Mahilvithu Mahil

RK.KANE MOZHI
Cell: 91591 10545

**My DRESS CODE™**
Just different. More unique..

SILK SAREES | FANCY SAREES | CHUDIDHAR | TOPS

mydresscodeslm@gmail.com | /mydresscodeslm

**My DESIGN STUDIO™**
*boutique style stitching*

"We undertaking All type of Stitching Work"

❖ *Aari Work* ❖ *Designer Blouse* ❖ *Customized Stitching*

#221, SURYA NIVASS, MAIN ROAD,
OPP. JAIN TEMPLE,
SHANKAR NAGAR, SALEM - 636 007.

Mob. : 98428 10545
76676 10545

உ
நமது சமூகத்தின் கல்வி வளர்ச்சியே எமது தலையாய குறிக்கோள்

உதவுவோம்! பண்படுத்துவோம்! பாராட்டுவோம்!

பட்டம் பெற்றுத் தொழிலிற் சிறப்போம்!

# அருவியூர் நகரத்தார் குரல்



ஆண்டு 26
குரல் 160

ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப்பு உடைத்து - குறள் 398

ஜூலை-2022
சுபகிருது-
ஆனி-ஆடி

**கழக நிர்வாகிகள்**

**தலைவர்**
செ. ஆசை அலங்காரம் - 96294 67287
**செயலாளர்**
மு. இராமலிங்கம் - 9943 01 7232
**பொருளாளர்**
சு. முத்து - 90430 10199

**நிர்வாகக் குழு**

**இணைத் தலைவர்கள்**
ஏ.பி. ஸேதுராமன் - 98422 89705
சொ. இராமனாதன் - 97155 100 0179
**துணைத் தலைவர்**
Ln. க. இளங்கோவன் - 94420 41340
**உறுப்பினர்கள்**
சொ. இளங்கோவன் - 94434 54173
ச. பழனியப்பன் - 90257 87637
சே. தவசீலன் - 98439 91517
ரா. வினோத்குமார் - 90038 00417

**உள் தணிக்கையாளர் :** R. வினோத்குமார்
**Website Manager : S.S. Manian,** DCE., Pudukkottai
**website : www.avnsangams.co.in**

**குரல் ஆண்டு சந்தா : ரூ.120/-**
**குரல் ஆயுள் சந்தா : ரூ.1800/-**

**குரல் நிறுவிய ஆசிரியர்**
திரு.சொ. வைத்திலிங்கம்
தொடக்கம் : 1997
**கௌரவ ஆசிரியர்**
திரு. M.S. முருகப்பன்
தலைவர் அ.வ.ந. பொதுநலச்சங்கம்

**குரல் பதிப்பாசிரியர்**
திரு செ. ஆசை அலங்காரம்
**ஆசிரியர் குழு**
திரு செ. ஆசை அலங்காரம்
Dr. சூரியகலா குமார்
V. கணேசன்
மற்றும் கழக நிர்வாகிகள்

கடிதம், செய்திகள், படைப்புகள் இவற்றை
அனுப்ப வேண்டிய முகவரி :
அருவியூர் நகரத்தார் குரல்,
அ.வ.ந. கல்வி வளர்ச்சிக் கழகம்,
3, முதல் குறுக்குத் தெரு,
அழகப்பா காம்ப்ளெக்ஸ் பின்புறம்,
பொன்னமராவதி,
புதுக்கோட்டை - 622 407.
avnkalvi@gmail.com
அலுவலக வாட்ஸ்அப் : 87783 55837

## முக்கிய அறிவிப்பு

வருமான வரித்துறையால் கல்வி வளர்ச்சிக் கழகத்திற்கு பிரிவு 80G-ன்படி வரிவிலக்கு பெற்றுள்ள தால் கல்வி வளர்ச்சிக் கழகத்திற்கு வழங்கும் அனைத்து நன்கொடையாளர்களின் ஆதார் கார்டு / பான் கார்டு / வாக்காளர் அடையாள அட்டை இதில் ஏதாவது ஒன்றை சமர்ப்பிக்கு மாறும், தவறும் பட்சத்தில் தாமதமாகும் ஒவ்வொரு நாளும் ரூ.200/- வீதம் கணக்கிட்டு அபராதம் விதிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே கல்வி வளர்ச்சிக்கழகம் அபராதம் கட்டுவதைத் தவிர்க்க அனைத்து நன்கொடையாளர்களும் தயவுசெய்து மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவதொரு அடையாள அட்டை நகலை சமர்ப்பிக்காதவர்கள் உடனடியாக செயலாளர் WhatsApp எண்ணுக்கு அனுப்புமாறு வேண்டுகிறேன்.

| தொடர்புக்கு : | இவண் |
|---|---|
| **மு. இராமலிங்கம்,** செயலாளர், | **செ. ஆசை அலங்காரம்,** |
| வாட்ஸ்அப் எண். 9943017232 | தலைவர், அ.வ.ந. கல்வி வளர்ச்சிக் கழகம். |

# உள்ளடக்கம்


| வ. எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | தலைவர் சிந்தனை | 3 |
| 2. | கல்வி வளர்ச்சிக் கழக அறிவிப்புகள் | 7 |
| 3. | பணமும் மனமும் | 9 |
| 4. | குழந்தைகளும் குளிர்காலமும் | 15 |
| 5. | கோவை அ.வ.ந. சங்க முப்பெரும் விழா | 21 |
| 6. | கல்வி காவலர்கள் | 25 |
| 7. | நம் சமுதாயத்தில் மேலும் மருத்துவர்கள் | 27 |
| 8. | புதிய கல்விக்காவலர் | 29 |
| 9. | பெருந்தொகை வழங்கிய நன்கொடையாளர்கள் | 30 |
| 10. | ஸ்ரீ மங்கைபாகர் தேனம்மை திருமண தகவல் மையம் | 31 |
| 11. | திருமூலர் திருமந்திரம் | 33 |
| 12. | அவையடக்கம் | 34 |
| 13. | சிவபாதம் சேர்ந்தார் | 35 |
| 14. | கல்யாண யோகம் தருவாரா சனி பகவான் | 37 |
| 15. | மனஅமைதி கிடைக்க | 40 |
| 16. | திருமணமான பெண் தன் தாய்க்கு எழுதிய கடிதம் | 44 |
| 17. | வாசகர் குரல் | 48 |
| 18. | தகவல் அறியும் உரிமைச் சட்டம் | 49 |
| 19. | குக்கர் பராமரிப்பு முறைகள் | 53 |
| 20. | அஜினோமோட்டோ | 55 |
| 21. | தஞ்சை அ.வ.ந. சங்க ஆண்டு விழா | 58 |
| 22. | முனைவர் பட்டம் பெற்ற நம்மவர் | 59 |
| 23. | இந்து தர்மம் | 60 |
| 24. | வேந்தன்பட்டி நெய் நந்தி விருத்தகம் | 62 |

தலைவர் சிந்தனை

**வணிகம் செய்வோம்!**

**வளம் பெறுவோம்!**

**செ. ஆசை அலங்காரம்** B.Sc.,

தலைவர்



**மக்கள் சேவையே! மகேசன் சேவை!**

நம் முன்னோர்கள் வாழ்ந்த வாழ்க்கையை திரும்பிப் பார்த்து அசை போடுகிறேன். திட்டமிட்டு அழகாக வடிவமைக்கப்பட்டு, உருவாக்கப்பட்ட அருவியூர் பட்டணம் அனைத்து வசதிகளும் கொண்ட கட்டிட கலைக்கு சான்று கூறும் வண்ணம் அமைக்கப்பட்ட மாட மாளிகையுடன் கூடிய அரண்மனையை ஒத்த கட்டிடங்கள். நம் அடையாளத்தைக் காட்ட சிங்கக் கொடி, நம்மவர்களின் கடல் வணிக பாதுகாப்பிற்கு மன்னரால் வழங்கப்பட்ட கடற்படை பாதுகாப்பு. மன்னருக்கு மணி மகுடம் சூடும் உரிமை. இதுபோன்ற பல எண்ணற்ற சிறப்புகளோடு மன்னராலும், மக்களாலும் கௌரமாக மதிக்கப்பட்டு வாழ்ந்த வரலாற்றுக்குரிய சமுதாயம் நம் சமுதாயம். மொகலாயர்களின் படையெடுப்பால் அருவியூர் பட்டணம் அழிக்கப்பட்டது. அவர்களின் செல்வங்கள் அனைத்தும் கொள்ளையடிக்கப்பட்டன. கோவில்கள் சின்னா பின்னமாக்கப்பட்டு சேதப்படுத்தப்பட்டது. அனைத்தையும் இழந்து உயிருக்குப் பயந்து மலை மறைவு பகுதிகளில் குடியேறி வாழத் தலைப்பட்டனர். அவ்வாறான காலத்தில் வேளாண்மையை பிரதான தொழிலாகவும், லேவாதேவி, பலசரக்குக் கடை போன்றவற்றை உபதொழிலாகவும் செய்து வாழ்ந்து வந்தார்கள். கிராமங்களில் வசித்து வந்த நம்மவர்களில் சிலர் தங்களின் வசிப்பிடத்திற்குப் பக்கத்தில் உள்ள சிறு நகரங்களுக்கு குடி பெயர்ந்தனர். தங்களுக்குத் தெரிந்த தொழிலை சற்று விரிவாக செய்ய தலைப்பட்டனர். அதன்பின் சுமார் 30, 40 ஆண்டுகளுக்கு முன்பு மதுரை, திருச்சி, கோவை, சென்னை, தஞ்சாவூர், திண்டுக்கல் போன்ற பெருநகரங்களை நோக்கி நகரத் தொடங்கினார்கள். தங்களின் கிராமங்களில் இருந்த விவசாய நிலங்களை விற்றுக் கிடைத்த பணத்தை தங்களுக்குத் தெரிந்த துறைகளில் முதலீடு செய்து தொழில் தொடங்கினார்கள். அவர்களின் துணிச்சலான முயற்சிக்கும்,

தொழில் தர்மம், நேர்மை ஆகியவைகள் அவர்களுக்கு உயர்வைத் தந்தது. இது நமது சமுதாய மக்களின் முன்னேற்றப் பாதையின் முதல்படி எனலாம்.

திரு நல்லசுப்பையா, திரு M.N. ராமநாதன் செட்டியார், திரு M.T.C. மணிக்காளை, திரு தே.மா. பழனிச்சாமி செட்டியார், திரு A. சேதுராமன் செட்டியார் போன்ற பல எண்ணற்ற தலைவர்கள், சமுதாய பெரியவர்களின் முயற்சியால் பொதுநலச் சங்கம் உருவாக்கப்பட்டு சிறப்பாக செயல்படத் தொடங்கியது. இதனால் சமுதாய முன்னேற்றம் ஏற்பட்டு, சொத்துக்களும் மீட்கப்பட்டு வளர ஆரம்பித்தது. பல சமுதாய நலத் திட்டங்கள் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இறைப்பணியும், பூஜைகள் குறைவின்றி நடைபெற்று வருகிறது. வளர்ச்சிப் பணிகளும் திட்டமிட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

நம் சமுதாயத்தில் உள்ள குழந்தைகள் அனைவருக்கும் கல்வி கிடைக்க வேண்டும் (அனைவருக்கும் கல்வி) அதன் மூலம் அவர்களின் பொருளாதார நிலை மேம்படவும், சமுதாய அந்தஸ்து உயர வேண்டும் என்கிற உயர்ந்த நோக்கத்தில், தெய்வத்திரு அ.லெ. முருகன், தேசிய நல்லாசிரியர் திரு நா. திருநாவுக்கரசு, திரு சொ. நடராஜன் ஆகியோர்களின் பெரு முயற்சியால் பொதுநலச் சங்கத் தலைவர்களின் ஆலோசனை யோடு கல்வி வளர்ச்சிக் கழகம் என்கிற அமைப்பு உருவாக்கப்பட்டது. நம் சமுதாயக் குழந்தைகள் அனைவரும் கல்வி கற்பதற்கான திட்டங்கள் தீட்டப்பட்டன. அதனை செயல்படுத்துவதற்காக நிதி சேகரிக்கப்பட்டு கல்வி உதவித் தொகை வழங்கும் திட்டமும், வட்டியில்லாக் கல்விக்கடனும், வறுமையிலும், ஆதரவற்ற நிலையிலும் இருக்கும் குழந்தைகளை தத்தெடுத்து அவர்களின் கல்விக் கட்டணம் முழுவதையும் கல்வி வளர்ச்சிக் கழகமே ஏற்றுக் கொள்வது போன்ற திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. முன்பெல்லாம் எழுதப்படிக்க தெரிந்தவுடன் பிள்ளைகளை கைபழக பலசரக்கு, ஜவுளி கடைகளுக்கு அனுப்பி வைத்தோம். ஆனால் இன்று நிலைமை முற்றிலும் மாறுபட்டு வீட்டுக்கொரு பட்டதாரி, பொறியாளர் என்கிற அளவில் நிலைமை வளர்ந்துள்ளது. அவர்களில் பலர் தனியார்/அரசு/ வெளிநாடுகளில் வேலை கிடைத்து பணிபுரிகின்றனர். பலர்

வேலைகிடைக்காமல் தாங்கள் கற்ற கல்விக்கும் பெற்ற அனுபவத்திற்கும் சம்பந்தமே இல்லாத துறைகளில் பணியாற்றி வருகிறார்கள். இன்றும் பலர் எந்த வேலையும் கிடைக்காமல் அலைகிறார்கள். நல்ல அறிவு, மதிநுட்பம், திறமைகள், அனுபவம் இவற்றிற்கெல்லாம் மேலாக நல்ல ஒழுக்கம் இருந்தும் வாய்ப்புகள் அமையாமல் சிரமப்படுகிறார்கள். இவர்களுக்கு ஒரு நல்ல வழியைக்காட்ட வேண்டியது நமது சமுதாயத்தின் கடமையாகும். இந்த உணர்வின் வெளிப்பாடுதான் "Health Care Pharma' என்கிற மருந்து வணிகத் தொழில். திருச்சி திரு K. சிவநேசன் அவர்களின் பெரு முயற்சியால் தொடங்கப்பட்டது. அதில் நம்மவரில் பலருக்கு வேலை கிடைக்க வாய்ப்புள்ளது என்பது மகிழ்ச்சிக்கு உரிய செய்தியாகும். இந்த நிறுவனம் தொடங்கப்பட்டதன் மூலம் தங்களிடம் இருந்த பணத்தை முதலீடு செய்ய ஒரு நல்ல நம்பகமான இடம் கிடைத்துள்ளது. இதில் வரும் லாபத்தை அதில் முதலீடு செய்தவர்கள் அவர்களின் முதலீட்டிற்கு ஏற்றவாறு விகிதாசாரப்படி பிரித்து எடுத்துக் கொள்வார்கள். இது நம் சமுதாயத்திற்கும் பயன்படக்கூடிய அமைப்பாக மாற வேண்டும் என்பதே எனது விருப்பம்.

நம்மிடையே எண்ணற்ற பொறியாளர்கள், D.Pharm., B.Pharm., M.Pharm., Agriculture, Catering போன்ற பல துறைகளில் படித்து விட்டு வேலை கிடைக்காமல் உள்ளவர்களும் இருக்கிறார்கள். இதே துறைகளில் சிறப்பாக செயல்படு பவர்களும் இருக்கிறார்கள். இவர்கள் பெற்ற கல்வியை, அனுபவத்தை சமுதாய முன்னேற்றத்திற்கு பயன்படுத்த வேண்டும். அதன் மூலம் சமுதாயத்தில் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்த வேண்டும். தொழில் தொடங்க ஆர்வம் உள்ளவர்கள் தங்களிடமுள்ள திட்டங்களை எங்களுக்கு எழுதி அனுப்புங்கள். பல துறைகளிலும் அனுபவம் உள்ள நம் பெரியவர்களைக் கொண்டு ஒரு அமைப்பை ஏற்படுத்தி அவர்களின் திட்டங்களை செயல்பாட்டிற்கு கொண்டு வர முயற்சிக்கலாம் அல்லது நமது சமுதாயத்தின் மூலமே அதனை செயல்படுத்த முயற்சிக்கலாம். இப்பணிகளைச் செய்வதற்கு ஒரு அமைப்பு தேவை. அவ்வாறு அமைக்கப்படும் அமைப்பின் மூலம் அவர்களுக்கு ஆலோசனைகள் வழங்கலாம் அல்லது நிதி திரட்டி அதனை செயல்படுத்த உதவி செய்யலாம்.

நாம் வணிகர் குலம். வணிகம் செய்வதற்கென்றே இறைவனால் படைக்கப்பட்ட ஒரு சமுதாயம். அதனால் நம் குலத் தொழிலான வணிகத்தை வளர்க்க முயற்சிக்க வேண்டும். அதற்கான வாய்ப்புகள் நிறைய உள்ளது. நம்மவர்களில் பலரிடம் பணம் உள்ளது. அதை என்ன செய்வது, எதில் முதலீடு செய்வது என்று தெரியாமல் அந்தப் பணத்தை மிகக் குறைந்த வட்டிக்கு வங்கியில் டெபாசிட் செய்கிறார்கள் அல்லது வட்டிக்கு ஆசைப்பட்டு கடன் கொடுத்து விட்டு அதனை வசூல் செய்ய அலைவதைப் பார்க்கின்றோம்.

பொதுநலச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டதால் பல பொது வேலைகள், பல நலத் திட்டங்கள், படித்தரம் வழிபாடுகள் சிறப்பாக நடத்தப்பட்டு வருகிறது. அதே போன்று கல்வி வளர்ச்சிக் கழகம் ஆரம்பிக்கப்பட்டதால் பல ஏழை மாணவர்கள் கல்வி பெற்றனர். வாழ்க்கையில் நல்ல நிலையில் உள்ளார்கள். இந்த இரண்டு சங்கங்களும் நம் சமுதாயத்தில் மாபெரும் புரட்சி, எழுச்சியை ஏற்படுத்தி சமுதாய முன்னேற்றத்திற்கு பாடுபட்டு வருகின்றன. அதனால் நம் சமுதாயமும் பெருமை அடைந்து வருகிறது. இதே போன்று தொழில் வளர்ச்சிக் கழகம் என்கிற ஒரு அமைப்பு ஏற்படுத்தப்பட வேண்டும். அதன் மூலம் நம் சமுதாயத்தின் பொருளாதார நிலை மேம்பட வழி வகுக்க வேண்டும். பொதுநலச் சங்க நிர்வாகம் மற்றும் நம் சமுதாய பெரியவர்கள் இது தொடர்பாக சிந்தித்து **தொழில் வளர்ச்சிக் கழகம்** என்கிற அமைப்பை ஏற்படுத்த வேண்டும் என்பது எனது தாழ்மையான வேண்டுகோள். அதற்கான கருத்துக்களையும் ஆலோசனைகளையும் கல்வி வளர்ச்சிக் கழகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். விரைவில் இது சம்மந்தமாக பொதுநலச்சங்க தலைவர் மற்றும் தொழில் வல்லுநர்களை கலந்து பேசி ஒரு ஆலோசனைக் கூட்டம் நடத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

தொழில் வளர்ச்சிக் கழகம் தொடங்குவோம்
தொழில் பல புரிவோம்
வேலை தேடி அலையோம்
பலருக்கும் வேலை வழங்குவோம்

# கல்வி வளர்ச்சிக் கழக அறிவிப்புகள்



மு.இராமலிங்கம், செயலாளர், அலுவலகம் - 87783 55837.

1. 2022-23-ம் கல்வி ஆண்டிற்கு கல்வி உதவித் தொகை கோரும் மாணவ, மாணவிகள் விண்ணப்பங்களை கல்வி வளர்ச்சிக் கழக அலுவலகத்திடமிருந்து பெற்றுக் கொள்ள கேட்டுக் கொள்கின்றோம். பூர்த்தி செய்த விண்ணப்பங்களை கல்வி வளர்ச்சிக் கழக அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம். தொடர்புக்கு : வாட்ஸ்அப் எண்.9943017232 மு. இராமலிங்கம், செயலாளர். விண்ணப்பங்களை பதிவிறக்கம் செய்ய **Website : www.avnsangams.co.in**

| வரிசை எண். | கடன் பெற்றவர் பெயர் | ஊர் | பெற்ற கடன் தொகை | கடன் முழுவதும் செலுத்திய தொகை |
|---|---|---|---|---|
| 1. | செ. ஆசை அலங்காரம் | கோவை | 30,000 | 30,000 |
| 2. | ப. சந்தோஷ்குமார் | திண்டுக்கல் | 40,000 | 40,000 |
| 3. | ரா. பத்மபிரியா | திண்டுக்கல் | 30,000 | 30,000 |
| 4. | மு. சௌந்தர்யா | தஞ்சாவூர் | 20,000 | 20,000 |
| 5. | ர. நாகவர்ஷினி | சென்னை | 10,000 | 10,000 |
| 6. | ச. மணிவாசகம் | தஞ்சாவூர் | 10,000 | 10,000 |
| 7. | ரா. ஹரிஸ் | தஞ்சாவூர் | 30,000 | 30,000 |
| 8. | சே. கார்த்திக் | சிங்கம்புணரி | 20,000 | 20,000 |
| 9. | B. சுந்தர் | சோமனூர் | 20,000 | 20,000 |

2020-2021 வரை கல்வி வளர்ச்சிக் கழகம் மூலம் 52 மாணவர்களுக்கு பட்ட மேற்படிப்பு படிப்பதற்கு கடன் வழங்கப்பட்டுள்ளது. அதில் மேற்கண்ட 9 மாணவர்கள் தங்களின் படிப்பு முடிந்து பெற்ற கடன்தொகை முழுவதும் செலுத்தி தாய் தந்தையருக்கும் பெருமை சேர்த்துள்ளனர். இதுபோல் மற்ற 44 மாணவர்கள் தாங்கள் பெற்ற கடனை சிறிது சிறிதாக செலுத்தி கடன் முழுவதையும் தீர்க்குமாறும் பிற படிக்கின்ற மாணவர்களுக்கு உதவி செய்யுமாறும் அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது. பணம் செலுத்தியவுடன் தகவல் தெரிவிக்க வேண்டிய வாட்ஸ்அப் எண்.99430 17232, மு. இராமலிங்கம், செயலாளர்.

**வங்கி கணக்கு விபரம்**

| | | |
|---|---|---|
| கணக்கின் பெயர் | : | அருவியூர் வடக்குவளவு நகரத்தார் கல்வி வளர்ச்சிக் கழகம் (AVN KALVI VALARCHI KAZHAGAM) |
| வங்கி/கிளையின் பெயர் | : | இந்தியன் பேங்க், புதுப்பட்டி |
| கணக்கு எண் | : | 493740102 |
| IFSC | : | IDIB000P052 |

**3. 10, 12-ம் வகுப்பு மதிப்பெண் பட்டியல் :**

10, 12-ம் வகுப்பு தேர்வு முடிவுகள் வெளிவந்துள்ளன. கல்வி வளர்ச்சிக் கழகத்தால் வழங்கப்படும் ஊக்கப் பரிசு பெற மதிப்பெண் சான்றிதழ் நகல்களை இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். அவ்வாறு அனுப்பி வைக்கும்போது கம்ப்யூட்டர் பிரிண்ட் அல்லது தற்காலிக சான்றிதழ்களை அனுப்ப வேண்டாம்.

அவரவர் பள்ளிகளில் வழங்கப்படும் 10-ம் வகுப்பு இறுதி மதிப்பெண் பட்டியல், +2 வகுப்பு மதிப்பெண் பட்டியலின் ஜெராக்ஸ் நகல் எடுத்து அதன் பின்புறம் பெற்றோர் பெயர், முகவரி (அஞ்சலக பின்கோடுடன்), செல் நம்பர், இரண்டு பாஸ்போர்ட் சைஸ் போட்டோ, குடிப்பட்டம் / பூர்வீகம் ஆகிய விபரங்களைத் தெளிவாக எழுதி கல்வி வளர்ச்சிக் கழகத்திற்கு அனுப்பி வைக்கவும்.

M.B.B.S., B.E., இளங்கலை, முதுகலை பட்டப்படிப்புகளில் பருவத் தேர்வுகளில் எவ்வித arrear இன்றி 80 சதவீதத்திற்கு மேல் மதிப்பெண் பெற்று தேர்ச்சி பெற்றவர்கள் தங்கள் சான்றிதழ் நகல்களை அனுப்பி வைக்கவும்.

மேற்குறிப்பிட்டுள்ளபடி நகல் சான்றிதழ்களை 30.9.2022-க்குள் இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்க கேட்டுக் கொள்கின்றோம்.

**செயலாளர், அ.வ.ந. கல்வி வளர்ச்சிக் கழகம்**

# பூப்புனித நீராட்டு விழா



தஞ்சாவூர் திரு **தி. மகேஷ் செட்டியார் - துர்காதேவி ஆச்சி** இவர்களது புதல்வி செல்வி **அருள்மொழிக்கு** 03.06.2022 வெள்ளிக்கிழமை அன்று பொன்னமராவதி மங்கைநாயகர் திருமண மண்டபத்தில் பூப்புனித நீராட்டு விழா உற்றார் உறவினர் வாழ்த்த இனிதே நடைபெற்றது.

**தகவல் : திரு சொ. இளங்கோவன் D.Pharm., தஞ்சாவூர்**
**கல்வி வளர்ச்சிக் கழக நிர்வாகக் குழு உறுப்பினர்**



# பணமும் மனமும்

பணத்தின் பாதுகாப்பு தான் முக்கியம் எனக் கருதுபவர், தங்கம் வாங்குவார். வங்கிகளில் டெபாசிட் போட்டு வைப்பார். ஆனால், பணத்தில் ரிஸ்க் எடுக்கத் தயங்காதவர், பங்குச் சந்தைகளில் முதலீடு செய்வார். அதிக வட்டி கிடைக்கும் எனத் தனியார் நிதி நிறுவனங்களில் பணத்தைப் போட்டு வைப்பார். அதனால் பணத்தை முதலீடு செய்வதில் ஒருவரின் வழிமுறை மற்றொருவருக்குப் பொருந்துவதில்லை. பெரும்பாலும் நாம் நமது பணத்தை முதலீடு செய்யும் முறைகளை நண்பர்களுடனோ, அலுவலகத்திலோ கலந்து எடுப்பதில்லை. நமது வீட்டில் சாப்பாட்டு நேரத்தின்போது, குடும்ப உறுப்பினர்களுடன் பேசும் போது தான் அத்தகைய முடிவுகள் எடுக்கப்படுகின்றன.

**கடனும் சேமிப்பும் :**

அதே போலப் பலர், வீட்டு உபயோகப் பொருட்களை கடனில் வாங்குவதுண்டு. கடனில் வாங்கிவிட்டு மாதந்தோறும் E.M.I. எனத் தவணையில் வட்டியுடன் கட்டுவார்கள். ஆனால் அதே தவணைத் தொகையை மாதந்தோறும் சேமித்து, பிறகு சேமித்தப் பணத்தில் வீட்டு உபயோகப் பொருளை ஆறு மாதங்கள் அல்லது ஒரு வருடம் கழித்து வாங்கினால் தேவையற்ற வட்டிச் செலவு இருக்காது எனத் தெரிந்திருந்தாலும் அதனைச் செய்ய மாட்டார்கள். அது ஒரு வித வாங்கும் தூண்டுச் சக்தி. வட்டியே கட்டினாலும் விருப்பப்பட்ட பொருளை உடனே வாங்கும் போது கிடைக்கும் மகிழ்ச்சி தனித்துவமானது என நினைப்பவர்கள் நிறையப் பேர் இருக்கின்றனர்.

**வாங்கும் மகிழ்ச்சியும் வாங்கும் வலியும்**

கடந்த ஐந்தாறு வருடங்களாக நான் காகிதப்

பணத்தினைப் பயன்படுத்துவதைக் குறிப்பிடத்தகுந்த அளவுக்கு நிறுத்தி விட்டோம். குறைந்தபட்ச செலவுகளுக்காக மட்டுமே பணத்தாளினை பயன்படுத்துவோம். மற்றபடி எல்லாச் செலவுகளையும் இணைய வழி, வங்கிச் சேவை அல்லது தனது வங்கியட்டையைப் பயன்படுத்திச் செலுத்துகிறோம். இப்படி இணைவழி-வங்கியட்டை பயன்படுத்த ஆரம்பித்த பிறகு ஒரு மிக முக்கியமான மாற்றம் நிகழ்கிறது. முன்பு பணமாகச் செலவுகளை மேற்கொண்டபோது பார்த்துப் பார்த்துச் செலவு செய்தோம். ஆனால் வங்கியட்டை பயன்படுத்த ஆரம்பித்த பிறகு செலவுகளை கவனிக்காமல் நினைத்தபோதெல்லாம் செலவழிக்கப்படுகிறது. கிரெடிட் கார்ட் எனப்படும் கடனட்டையைப் பயன்படுத்த ஆரம்பித்தபிறகு, ஒருவர் பல முறை தேவையற்ற செலவுகளை செய்துள்ளதை ரொம்பத் தாமதமாகத் தான் உணர்கிறார். இதனைப் பொருட்களை வாங்கும் வலி மற்றும் பொருட்களை வாங்கும் மகிழ்ச்சி (Pain of buying and joy of buying) எனக் குறிப்பிடுவோம்.

அதாவது ஒரு பொருளுக்கு நாம் நமது பர்ஸில் இருந்து பணமாக எடுத்துக் கொடுக்கும் போது அது பொருள் வாங்கும் வலியை ஏற்படுத்துகிறது. அதையே நாம் கடனட்டை அல்லது இணையதள வங்கி சேவையை பயன்படுத்திப் பொருள் வாங்கும்போது பணமானது நம் கண்முன்னே நம்மிடமிருந்து வெளியே செல்வதை நாம் பார்க்கமுடியாததால் பொருள் வாங்கும் மகிழ்ச்சியே அதிகம் கிடைத்துத் தொடர்ந்து பல தேவையில்லாத பொருட்களை வாங்கிக் குவிக்கும் பழக்கம் வந்துவிடுகிறது. இந்த சூட்சுமத்தை புரிந்து கொண்டால் நாமும் நிறையச் செலவுகளைத் தவிர்க்கலாம்.

**மாற்றி யோசி**

பணத்தைப் பெருக்குவதில் பெரும்பாலான மக்கள் செய்வதை மாற்றி யோசித்தால் நல்ல பலன் தரும். இதுவும் பணவள-உளவியலில் முக்கியமான பாடம். நம் கண் முன்னே நடந்த ஒரு எடுத்துக்காட்டைப் பார்ப்போம். இப்போதெல்லாம் இளைஞர்கள் காலேஜ் படிப்பை முடிக்கிறார்களோ, இல்லையோ அப்பா, அம்மா சேமித்து வைத்த பணத்தில் பைக் வாங்குவது வழக்கமாகி விட்டது. அதுவும் ராயல் என்ஃபீல்ட் வண்டி ஒரு

வகை. அதுவும் ராயல் என்ஃபீல்டு வண்டி தான் வேணும் என அடம்பிடித்து வாங்குபவர்கள் அதிகம். ராயல் என்ஃபீல்டு வண்டி ஒரு வகை ஸ்டேடஸ் அடையாளமாக மாறிவிட்டதால் அதனைக் கடனில் வாங்கவும் மக்கள் தயங்குவதில்லை. பத்து வருஷத்துக்கு முன் (2010) புதிய ராயல் என்ஃபீல்டு வண்டி ஒரு லட்ச ரூபாய்க்கு விற்றது. அதே காலகட்டத்தில் அந்த வண்டியைத் தயாரிக்கும் ஈய்ச்சர் நிறுவனத்தின் பங்கு ஒன்றின் விலை ஷேர் மார்கெட்டில் ரூ.650/-க்கு விற்றது. நாம் மாற்றி யோசித்து அதே ஒரு லட்ச ரூபாய்க்கு புல்லட் கம்பெனியோட பங்குகளை வாங்கியிருந்தால் நாம் சுமார் 160 பங்குகளை வாங்கியிருப்போம். 2010-ல் வாங்கிய புல்லட்டை இப்ப விற்றால் ஐம்பதாயிரம் ரூபாய்க்கு கூட விற்காது. ஆனா அந்த 160 பங்குகளின் இன்றைய சந்தை விலை ஒரு பங்கு ரூ.2800/- என்று இருக்கிறது. இன்றைக்கு 160 பங்குகளை விற்றால் நமக்கு நான்கு இலட்சத்து ஐம்பதாயிரம் கிடைக்கும். பத்தே வருடத்தில் நான்கு மடங்கு லாபம். ஆனா வாங்கிய பொருளின் மதிப்பு பாதியாக குறைந்து விடுகிறது.

நமக்கெல்லாம் ஷேர் செட்டாகாது என்பவர்கள் பேங்க்ல அந்தப் பணத்தை போட்டிருந்தாலும் இரண்டு மடங்குக்கும் மேல் லாபம் பார்த்திருக்கலாம். விலையுயர்ந்த பொருட்களை பெருமைக்காக வாங்குபவர்கள் இருக்கும் வரை, அந்தப் பொருள்களை விற்பவர்களும், அதில் முதலீடு செய்தவர்களும் நிறைய சம்பாதிப்பாங்க. இந்த விதியை நமது முதலீட்டுத் திட்டங்களில் கவனித்து, மாற்றி யோசித்தால் நிச்சயம் பணத்தால் சம்பாதிக்க முடியும். **- M.D. தீபிகா (எ) மணிஷா மாணிக்கம்,**

**B.Com 1st year CA Preliminary திண்டுக்கல்.**

---

## ஜோக்....ஜோக்...ஜோக்....



"ஃபேன் (Fan) ஏன் நிற்காமல் சுத்துது?"

என ஆசிரியர் வினவ,

"ஏன்னா அதுக்கு கால் இல்லை"

என்றான் மாணவன். - J. காவியா M.Sc., பெங்களூர்.

# குலதெய்வ கூட்டு வழிபாடு



பூர்வீகம் கிருங்காக்கோட்டை வேலன் செட்டி வகையறா கமூகக்கூருடையார் பங்காளிகள் அனைவரும் ஒன்று சேர்ந்து சென்ற சுபகிருது வருடம் வைகாசி மாதம் 10-ம் தேதி 24-05-2022 செவ்வாய்கிழமை அன்று பொன்னமராவதி ஸ்ரீ அழகிய நாச்சியம்மன் கோவிலிலும், 13-ம் தேதி 27-05-2022 வெள்ளிக்கிழமை அன்று வார்பட்டு அருகில் உள்ள அழகு சொக்கனில் ஸ்ரீ அழகு சொக்கர் கோவிலிலும் சுவாமிகளுக்கு அபிஷேகங்கள், அலங்காரங்கள், அர்ச்சனைகள் செய்து வழிபாடு செய்யப்பட்டன. இதில் மாமன்மார்கள், மைத்துனர்கள், உறவினர்கள் அனைவரும் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள். விழாவில் கலந்து கொண்ட அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.

**தகவல் : திரு சு. மங்கைபாகன், செய்தி தொடர்பாளர், பிரான்மலை.**

உ
சிவமயம்

யாவர்க்குமாம் இறைவர்க்கு ஒரு பச்சிலை
யாவர்க்குமாம் பசுவுக்கொரு வாயுறை
யாவர்க்குமாம் உண்ணும் போது ஒருகைப்பிடி
யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரைதானே.

**அரசு மெடிக்கல்ஸ்**

**வெள்ளி விழா கண்ட நிறுவனம்**

**எல்லாவிதமான இங்கிலீஷ் மருந்துகளும் கிடைக்கும்**





**பஸ் ஸ்டாண்டு அருகில், பொன்னமராவதி. போன் : 260657**

ஸ்ரீ மலையாள சாஸ்தா அய்யனார் துணை

தொடக்கம்
2003



குடிப்பட்டம்: மேலூருடையார்
செல்: 89407 22771
பூர்வீகம்: K. புதுப்பட்டி



காசாளர் : அ.ச. அலங்கார குமரன்

# ஸ்ரீ சாஸ்தா

## ஐயங்கார் பேக்கரி

PNS

கடை முகவரி: ஸ்ரீ சாஸ்தா ஐயங்கார் பேக்கரி, மில் ஸ்டாப்,
பல்லடம் ரோடு, கணபதிபாளையம் பிரிவு,
திருப்பூர்–641 605 செல்: 978718 2883

பொன்மொழி : நம்மை உற்சாகப்படுத்தி, மகிழ்ச்சி தந்து எப்போதும்
ஆனந்தம், வெற்றி இவைகளைத் தருவது புத்தகம் மட்டுமே!









உயர்தர இனிப்பு மற்றும் கார வகைகள்,
பிறந்த நாள் கேக் வகைகள்,
ஐஸ்கிரீம், பிரஸ் ஜூஸ், டீ, காபி
இவை அனைத்தும் இங்கு கிடைக்கும்.

**‘உலக நன்மைகளும்**
**சுவாரஸ்யமான சிவ ரகசியங்களும்’**
என்ற தலைப்பில் நூல் விரைவில் வெளி வருகின்றது

நூலாசிரியர் : **அ.ச. அலங்கார குமாரன்,**
K. புதுப்பட்டி

**நல்வாழ்த்துகளுடன்**

**அ.ச. அலங்கார குமரன்**
மனைவி : **அ. ரேவதி,** L.I.C. Agent
மகன் : **அ. அரவிந்த்** B.E.
மகள் : **அ. கனிஅமுது**



# சித்திர குப்தர்

எமதர்மராஜாவின் கணக்கப்பிள்ளை சித்திர குப்தர். உயிர்களின் பாவ, புண்ணிய கணக்குகளை பதிவேட்டில் பதிவு செய்பவர். இவர் சித்திரை மாதம் பௌர்ணமி அன்று அவதரித்தார். இந்நாளில் காலையில் எண்ணெய் தேய்த்து குளித்து சித்திர குப்தரின் படம் அல்லது விளக்கின் முன் மலர்கள் தூவி வழிபட வேண்டும். பானகம், நீர்மோர், வெல்லம் சேர்த்த அவல் ஆகியவைகளை படைத்து வழிபட வேண்டும். இவர் பசுவின் வயிற்றில் இருந்து பிறந்தவர் என்பதால் அன்று விரதம் இருப்பவர்கள் பால், தயிர், வெண்ணெய், நெய் ஆகியவற்றை சாப்பிடக் கூடாது. உப்பையும் தவிர்ப்பது நல்லது. இதன் மூலம் ஆரோக்கியம், செல்வம், நிறைந்த புகழும் உண்டாகும். ஏழைகளுக்கு ஆடைகள் தானமாக வழங்குவதால் பாவம் போகும். **- D. க்ருத்திக் வாசன், 10-ம் வகுப்பு, திண்டுக்கல்**


உ

சிவமயம்

உடல் நலம் பேணுவோம்! உளம் மகிழ வாழ்வோம் !!

**கார்த்திக் மெடிக்கல்ஸ்**

காந்திபார்க், கோவை

**காமாட்சி பார்மஸி**

சுக்ரவார்பேட்டை, கோவை

செல் : 95144 52521





எல்லாவிதமான இங்கிலீஸ் மருந்துகளும் கிடைக்கும்

S. கிருஷ்ணசாமி

K. பானுமதி

K. மீனாட்சி B.E.

K. மோகனசுந்தரி B.E.

K. கார்த்திக் B.Sc.,



# குழந்தைகளும் குளிர்காலமும்

அனைவருக்குமே சிரமத்தைக் கொடுக்கும் காலம் குளிர்காலம். அதிலும் குறிப்பாக குழந்தைகள் நிலை இன்னும் மோசமானது. குழந்தைகளைக் குளிர்காலத்தில் மிகவும் கவனமாக கவனித்துக் கொள்ள வேண்டும். அதிக குளிர் மற்றும் தூசு காரணமாக காய்ச்சல், சளி, இருமல் போன்ற நோய்கள் குழந்தைகளை எளிதில் தாக்குகிறது. எவ்வளவுதான் நோய் எதிர்ப்பு சக்தி அதிகமாக இருந்தாலும் குழந்தைகள் மிக எளிதில் இது போன்ற பருவ காலங்களில் நோய்வாய்ப்படுகிறார்கள். பிறந்த சிசு 1 முதல் 5 வயது வரையிலான குழந்தைகள், 5 முதல் 14 வயது வரையிலான குழந்தைகள் குளிர்காலத்தில் எதிர்கொள்ளும் துயர் குறித்துக் காண்போம்.

**1. சிசு (New Born)**

பிறந்த குழந்தைகள் குளிர்காலத்தில் குறைந்த உடல் வெப்பம் என்னும் Hypothermia வினால் பாதிக்கப்படலாம். அதற்கு காரணம் பிறந்த குழந்தையின் Large Surface Area அதனால் உஷ்ண இழப்பு அதிகம் ஏற்பட வாய்ப்பு உண்டு. குறை மாதக் குழந்தை (Preterm), எடை குறைந்த குழந்தைகள் (Low Birth Weight), கிருமித் தொற்றுப் பாதித்த குழந்தை (Neonatal Infection), சரியாகப் பால் குடிக்காத குழந்தை (Poor Fed Infants) ஆகியவை Hypotherminaவினால் அதிகம் பாதிக்கும் அபாயம் உண்டு.

## அறிகுறிகள்

குழந்தை சோர்வாக இருக்கும். (Lethargy) சரியாக பால் குடிக்காமல் இருக்கும் (Poor Feeding), அலறி அழ முடியாமை (Weak cry) வெளிறிய தன்மையுடன் காணப்படும் (Pale) கால், கைகள் குளிர்ந்திருத்தல் (Cold Extremities) மூச்சு விட சிரமப்படும் ( Breathing difficulty)

**தடுப்பது**



பிரசவ அறை மற்றும் ஆபரேஷன் அரங்கம் ஆகியவற்றில் (Optimal Temparature) இருக்க வேண்டும். பிரசவம் ஆனவுடன் குழந்தையை கம்பளியில் குழந்தையைச் சுற்றி வைக்க வேண்டும். வெப்பமான அறை, தாயின் அரவணைப்பு போன்றவை குழந்தையின் உடல் வெப்பத்தை அதிகரிக்க உதவும். மேலும் தாய்ப்பால் சுரப்பதற்கும் அது உதவி செய்யும். தாய்ப்பால் குடிப்பதால் நல்ல எதிர்ப்புசக்தி கிடைக்கும். புட்டிப்பால் குடிக்கும் குழந்தைகளுக்கு நோய்த் தொற்று மற்றும் வயிற்றுப்போக்கு நோய் ஏற்படலாம்.

**2. முன்பள்ளிக் குழந்தைகள் (1-5)**

குளிர்காலத்தில் கிருமித் தொற்று அதிகம் வர வாய்ப்புகள் இருப்பதால் அதிகம் வெளியில் செல்வதையும், தேவையற்ற பயணங்கள் மற்றும் கூட்டங்களுக்குச் செல்வதையும் தவிர்க்க வேண்டும். குளிர்பானங்கள் (Juices & Fridge Items) தவிர்த்தல் நல்லது. காதுகளை மறைத்து ஸ்கார்ப் (துணி) கட்டுவதால் சளிப் பிடிப்பதைக் தடுக்கலாம்.

மேலும் காய்கறிகள், நட்ஸ், பருப்பு வகைகள், பாசிப் பயிறு, வெங்காயம் மற்றும் பூண்டு ஆகியவற்றை உணவில் சேர்த்துக் கொள்ளுதல் வெதுவெதுப்பான பாலுடன் மஞ்சள் தூள் கலந்து பருகுதல் போன்றவற்றின் மூலம் நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகப்படுத்தலாம்.

அடிக்கடி சளிப் பிடித்தால் குழந்தையின் எடை கூடாமல் வளர்ச்சி பாதிக்கப்படலாம். எனவே இனிப்பு வகைகள், ஐஸ் கிரீம், சாக்லெட் போன்றவற்றைத் தவிர்க்கலாம்.

**3. குழந்தைகள் (5-14)**

அடிக்கடி ஒவ்வாமை உள்ளவர்கள், குளிர் காலத்தில்

நகரத்தார் குரல் சிறக்க வாழ்த்துக்கள்!

தலைமுறைகள் நீடித்து நிற்கும் கட்டிடங்களின் நம்பிக்கை

ATC

# அன்பு வணிக நிலையம்

அண்ணாசாலை, பொன்னமராவதி - 622 407.

போன்: 04333 262095 செல்: 94421 60385, 94434 13223

Texmo Industries
Est. 1956
டேரோ பம்புகள்

மகத்தான அறுவடையின் ரகசியம்

Taro Pumps

GM
SWITCH TO A BETTER WORLD

NIPPON PAINT

ESSCO
BY Jaquar GROUP

UltraTech CEMENT
The Engineer's Choice

Chettinad cement

RAMCO SUPERGRADE
As strong as family bonds.

AMMAN-TRY
TMT BARS
500 guarD
கட்டிடங்களின் பாதுகாவலன்

SRI DURGA TMT

TNPL Cement
Give your building life long protection!

TATA TISCON SD
SUPER DUCTILE REBARS

Birla White
THE WHITEST WHITE CEMENT

FinOlex INDUSTRIES



பொருள்கருவி காலம் வினையிடனொ டைந்தும்
இருள்தீர எண்ணிச் செயல்

- திருவள்ளுவம்

## நல்வாழ்த்துகளுடன்...

**DEEPA ERECTORS PRIVATE LIMITED**
No. 16/5, 1st Main Road, Ramakrishna Nagar,
Ernavoor, Chennai - 600057
mail to : depl@depltd.in

**PHOENIX OILFIELD SERVICES & CONTRACTING LLC**
P.O. BOX: 1151, WADI KABIR P.C. 117,
Sultanate of Oman.

*Specialists in :*

**Construction of Storage Tanks, Pressure Vessels, Pipelines and Blasting & Painting in India & Overseas**







R. Paramasivam B.E.,
***Managing Director***
Ph.: 9884660379

Pa. Mathivanan B.E.,
***Chief Executive Officer***
& A. Nivetha B.E., M.B.A.,
***Business Analyst***

Pa. Shankar B.E., M.S., (Sweden)
***Consultant***

அதிகம் பாதிக்கப்படலாம். ஒவ்வாமை மூச்சுக்குழாய் அழற்சி (Allergic Wheezing Bronchitis) மற்றும் நாசியழற்சி (Rhinitis) உள்ள குழந்தைகள் பாதுகாப்பாக Flu Vaccine-ஐக் கட்டாயம் போட்டுக் கொள்ள வேண்டும். இதைத் தவிர தடுப்பூசிக்கான வழக்கமான அட்டவணைப்படி நிமோனியா தடுப்பூசிகளை HIB & Pneumococcal Vaccines போட்டுக் கொண்டால் மிக மோசமான நிமோனியா நோயில் இருந்தும் காத்துக் கொள்ளலாம். இந்த ஊசி, அரசு மருத்துவமனைகள் மற்றும் தனியார் மருத்துவமனைகளிலும் போட்டுக் கொள்ளலாம்.

குளிர்காலத்தில் தோல் வறண்டு போகும், தடிப்புகள் வரலாம். அதற்கு Moisturizers & Aloevera Lotion உபயோகப்படுத்தலாம். மேலும் குளிர்காலத்தில் அதிகம் தண்ணீர் குடிக்காமல் இருப்பதால் மலச்சிக்கல் ஏற்படலாம். அந்த சமயத்தில் குழந்தைகளுக்கு வெதுவெதுப்பான தண்ணீர் மற்றும் வாழைப்பழம் கொடுக்க வேண்டும்.

## நோய் தடுக்கும் வழிமுறைகள் :

சளி, தும்மல், காய்ச்சல் உள்ளவர்கள் குழந்தைகளைத் தூக்கவோ, அருகில் செல்லவோ, கொஞ்சவோ கூடாது. தாய்ப்பால் ஊட்டும் தாய்மார்கள் மட்டும் குழந்தைகளைக் கையாள வேண்டும். தடுப்பூசிகளை Flu & Pneumonia Vaccines தங்களின் குழந்தைகள் நல மருத்துவரைக் கலந்து ஆலோசித்துப் போட்டுக் கொள்ளவும்.

பிறந்த குழந்தைக்கு 1 வருடத்திற்கு முன்னால் மொட்டை போடவோ, காது குத்துதல் போன்ற சடங்குகளை கட்டாயம் தவிர்க்க வேண்டும். அது குழந்தைகளுக்கு கிருமித் தொற்று ஏற்பட்டுச் சளி அதிகமாகிக் காய்ச்சல் மற்றும் நிமோனியா ஏற்படும் ஆபத்தினை அதிகமாக்கிவிடும். குளிர்காலத்தில் வயிற்றுப்போக்கு அதிகமாக வாய்ப்பு இருப்பதால் தண்ணீர் மற்றும் பாலை நன்றாக சூடுபடுத்திக் காய்ச்சிய பின்பு கொடுக்க வேண்டும். வயிற்றுப்போக்குத் தடுப்பதற்கான Rotavirus Vaccine ஐயும் தாங்கள் மருத்துவரை அணுகி போட்டுக்கொள்ளவும்.

– I. **ரேவதி** M.Sc., B.Ed., **கோவை**

உ

ஸ்ரீ வயிரவ சுவாமி துணை

வாழ்த்துகளுடன்

கடை: 94432 06431
97867 46431

வீடு: 97874 81103



# சிவசக்தி ஸ்டோர்ஸ்

279, அண்ணாசாலை,
**பொன்னமராவதி.**

**மளிகை, ஆயில், ஸ்டேசனரி மற்றும்
குளிர்பானங்கள் மொத்தம் & சில்லறை**

# அன்னம் டிரேடர்ஸ்



வடுகநாதன் ரோடு,
KVB பேங்க் அருகில்,
**பொன்னமராவதி.**



ஸ்டாக்கிஸ்ட்:
**நெஸ்டில், மைசூர் சோப்,
ராஜம் சுக்கு காபி,
பண்ணாரி மைதா.**

# ராநா கெஸ்ட் ஹவுஸ்

KVB பேங்க் அருகில், **பொன்னமராவதி.**

முற்றிலும் குளிரூட்டப்பட்ட (A/C) ரூம்கள்,
சிறிய பெரிய அளவுகளில், நிறைந்த வசதிகளுடன்,
நிறைவான கட்டணத்தில்,
நகரின் மத்தியில் தரமான தங்கும் விடுதி.



## சிக்கலூருடையார் பங்காளிகள் குலதெய்வ மண்டகப்படி வழிபாடு

விராச்சிலை ஸ்ரீ மது அடைக்கலங் காத்த அம்பாள் வைகாசி மாத பத்து நாட்கள் திருவிழாவில் 5-ம் நாள் திருவிழா (மண்டகப்படி) V. புதூர், படமிஞ்சி சிக்கலூருடையார் பங்காளிகளால் 03.06.2022 வைகாசி மாதம் 20-ம் நாள் வெள்ளிக்கிழமை சிறப்பான முறையில் நடைபெற்றது. இரவில் அம்பாள் வெள்ளி வாகனத்தில் திருவீதி உலாவிற்குப்பிறகு மூத்தவர் திரு V. கணேசன் அவர்களுக்கு கோவில் சார்பாக பரிவட்டம் கட்டி காளாஞ்சி வழங்கி மரியாதை செய்தார்கள். ஸ்ரீ மது அடைக்கலங்காத்த அம்பாள் கர்ப்பகிரகத்திற்கு அருகில் வீற்றிருந்து அருள் தரும் ஸ்ரீ மயிலம்மாள் தெய்வம் சிக்கலூருடையார் கன்னிப் பெண் என்பது குறிப்பிட வேண்டிய ஒன்றாகும். பங்காளிகளும், பிறந்த பெண் மக்களும், மாமன் மைத்துனர்களும் விழாவில் கலந்து கொண்டு அம்பாளின் அருளைப்பெற்று காளாஞ்சி விபூதி பிரசாதம் பெற்றார்கள் விருந்து உபசரிப்பு நடைபெற்றது. 5-ம் மண்டகப்படி திருவிழாவிற்காக கோவிலுக்கு பங்காளிகளால் நன்கொடை வழங்கப்பட்டது.

நகரத்தார் அனைவரும் குலதெய்வ வழிபாடு செய்வோம்! வளமுடன் வாழ்வோம்!!

தகவல்: V. கணேசன் (சிக்கலூருடையார்), தலைவர் அ.வ.ந. சங்கம், V. புதூர்



## கிரஹப்பிரவேசம்

தஞ்சாவூர் **திரு வி. திருவம்பலராஜா செட்டியார் - தி. ஜெயராணி ஆச்சி** இவர்கள், நாஞ்சிக்கோட்டை ரோடு, முல்லை நகர், மனை எண் 52-ல் புதிதாகக் கட்டப்பட்ட **பொன்னழகு பவனம்,** புதுமனை புகுவிழா 03-06-2022 வெள்ளிக்கிழமை அன்று இனிதே நடைபெற்றது.

**தகவல் : திரு சொ. இளங்கோவன் D.Pharm., தஞ்சாவூர்**
**கல்வி வளர்ச்சிக்க கழக நிர்வாகக் குழு உறுப்பினர்**

## அகம் நிறைந்த அன்னைக்கு

## ஆறாம் ஆண்டு நினைவு அஞ்சலி

ஆழமான அழியா நினைவுகளோடு...
அன்னையின் ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி!
இன்று புதுவரவால் இல்லமே பூரிக்கின்றது!
அன்னை இல்லத்தில் அடுத்த
தலைமுறையின் துளிர் விட்டு
அழகு பேரன் தவழ்கிறான் மணிரத்னமாய்
அவனை சுற்றி அனைவரும் இருக்க
ஆசை பேரன் தேடுவது அப்பத்தாவின்
முகத்தை...
நிலையில்லா இவ்வுலகில் அன்பு அன்னையே
நீங்காத தம் நினைவுகளோடு
நாட்களை கடக்கின்றோம்...
அப்பத்தாவின் அன்பை உணர அழகு
பேரன் காத்திருக்கின்றான்...
கடவுளாய் காட்சி தந்து
காலமெல்லாம் அன்பு பேரனை
அரவணைத்து அகமகிழ்வாய் அம்மா!

மகன்: **T.மணிரத்னம்** B.E.,
மருமகள்: **M.ஆர்த்தி** BBA.,(MIB)
மகள்: **S.ராஜபிரியா** B.Sc.,
மருமகன்: **S.சரவணன்** D.Pharm.,
பேத்தி: **S.ஷாலினி**
பேரன்: மாஸ்டர் **S.சஞ்சய்**
**தொண்டாமுத்தூர்.**

மகள்: **R.சுகன்யா** B.Sc.,
மருமகன்: **S.ரவிராஜன்**
பேரன்: **R.ஸ்ரீதர்**
**பொன்னமராவதி.**

மற்றும் **குடும்பத்தார்கள், உறவினர்கள்**

# கோவை அருவியூர் வடக்குவளவு நகரத்தார் சங்கம் முப்பெரும் விழா

கோவை அருவியூர் வடக்குவளவு நகரத்தார் சங்கத்தின் 36-வது ஆண்டு விழா மற்றும் இளைஞர் பேரவையின் 18-வது ஆண்டு தொடக்க விழா மற்றும் கோவை மகளிர் சங்கம் தொடக்க விழா என முப்பெரும் விழாவாக 01-05-2022 ஞாயிற்றுக்கிழமை அன்று பேரூர் தேவர் திருமண மண்டபத்தில் பொதுக்குழு கூட்டம் சிறப்பாக நடைபெற்றது. விழாவிற்கு கோவை சங்கத்தின் தலைவர் திரு A.P. ஸேதுராமன் அவர்கள் தலைமை ஏற்க, சங்கத்தின் துணைத் தலைவர் திரு C. அருணகிரி அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். திரு A.P. ஸேதுராமன் அவர்கள் தலைமை உரை ஆற்ற, செயலாளர் திரு G. சுப்பிரமணியன் ஆண்டறிக்கை வாசித்தார். பொருளாளர் திரு M. சுவாமிநாதன் அவர்கள் பொருளாதார அறிக்கை வாசிக்க, சேமிப்பு திட்ட அறிக்கையை சங்கத்தின் திட்ட பொறுப்பாளர் திரு TMR.S. சிவக்குமார் அவர்கள் வாசித்தார். கோவை சங்கத்தின் மற்ற நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டு தங்கள் கருத்துக்களை எடுத்துரைத்தனர்.

ஆண்டு விழாவிற்கு சிறப்பு விருந்தினர்களாக அ.வ.ந. பொதுநலச் சங்கத்தின் தலைவர் திரு M.S. முருகப்பன் அவர்களும், செயலாளர் திரு M. சாமிநாதன் அவர்களும் பொருளாளர் திரு S. மங்கைபாகன் அவர்களும் மற்றும் அருவியூர் வடக்குவளவு நகரத்தார் கல்வி வளர்ச்சிக் கழகத்தின் தலைவர் திரு S. ஆசை அலங்காரம், செயலாளர் திரு மு. இராமலிங்கம், பொருளாளர் திரு S. முத்து ஆகியோர்களும் கலந்து கொண்டார்கள். மற்றுமொரு சிறப்பு விருந்தினராக காங்கேயம் திரு பாபு பத்மநாபன் அவர்கள் கலந்து கொண்டு நமது நகரத்தார் வாழ்வியல் பற்றி சிறப்பு சொற்பொழிவு ஆற்றினார். விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்த சிறப்பு விருந்தினர்கள் அனைவருக்கும் சங்கத்தின் சார்பில் பொன்னாடை அணிவித்து கௌரவிக்கப்பட்டார்கள்.

விழாவின் தொடர்ச்சியாக 2022-2025 ஆம் ஆண்டுகளுக்கான புதிய நிர்வாகிகள் தேர்தல் நடைபெற்றது.

தேர்தல் அதிகாரிகளாக திரு NS. அசோகா, திரு KT. வெங்கடாசலம், திரு T. சேவற்கொடியோன், திரு C. சரவணன் ஆகியோர்கள் பணியாற்றினார்கள்.

**புதிய நிர்வாகிகள்:**

கோவை சங்கத்தின் 2022-25 ஆம் ஆண்டுகளுக்கு புதிய நிர்வாகிகளாக தேர்வு செய்யப்பட்ட முறையே திரு A.P. ஸேதுராமன் அவர்கள் தலைவராகவும், திரு N. செல்வம் செட்டியார் அவர்கள் கௌரவத் தலைவராகவும், செயலாளராக திரு G. சுப்பிரமணியன் அவர்களும், திரு M. சுவாமிநாதன் அவர்கள் பொருளாளராகவும், கல்வி வளர்ச்சிக் கழகத் தலைவராக திரு C. அருணகிரி அவர்களும், சேமிப்புத் திட்டப் பொறுப்பாளராக திரு TMRS. சிவக்குமார் அவர்களும், திட்ட பொறுப்பாளராக திரு NS. அசோகா அவர்களும், அறங்காவலராக திரு தேனிமலை நாகப்பன் அவர்களும், துணைத் தலைவர்களாக திரு S. ராமநாதன் அவர்களும், திரு S. வெள்ளைச்சாமி அவர்களும் திரு M. சரவணன் அவர்களும் துணைச் செயலாளர்களாக திரு R. விஜய் அலங்காரம் அவர்களும் திரு M. அன்பரசன் அவர்களும், திரு A. சண்முக நாதன் அவர்களும் பொறுப்பேற்றுக் கொண்டார்கள்.

**இளைஞர் பேரவை:**

இளைஞர் பேரவையின் பொதுக்குழுக் கூட்டம் தலைவர் திரு K.S. பிரகாஷ் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இளைஞர் பேரவையின் மற்ற நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். 2022-2025 ஆண்டுகளுக்கான கோவை இளைஞர் பேரவையின் புதிய நிர்வாகிகளாக தலைவராக திரு P. காந்தி அவர்களும், செயலாளராக திரு N. பாலகிருஷ்ணன் அவர்களும் பொருளாளராக திரு KS. பிரகாஷ் அவர்களும் சேமிப்புத் திட்ட பொறுப்பாளர்களாக திரு R. நல்ல பாகன், திரு M. சதீஷ் ஆகியோர்களும், துணைத் தலைவர்களாக திரு K. சண்முக சுந்தரம் அவர்களும், திரு S. சபரிகாந்த் அவர்களும், துணைச் செயலாளர்களாக திரு C. சூர்யா அவர்களும் திரு A. பிரவீன் அவர்களும் நூலகப் பொறுப்பாளராக திரு K. சோலைராஜன் அவர்களும் பொறுப்பேற்றுக் கொண்டார்கள்.

**மகளிர் சங்க நிர்வாகிகள்:**

கோவை அருவியூர் வடக்கு வளவு நகரத்தார் மகளிர் சங்கத் தலைவியாக திருமதி R. பத்மாவதி அவர்களும், செயலாளராக திருமதி P. சுமதி ஸ்ரீ அவர்களும், பொருளாளராக திருமதி N. ரேவதி அவர்களும், சேமிப்புத் திட்டப் பொறுப்பாளர் களாக திருமதி G. கீதா அவர்களும், திருமதி D. விஜய லட்சுமி அவர்களும், துணைத் தலைவராக திரு A. சிவகாமி அவர்களும் துணைச் செயலாளராக திருமதி D. கலைச் செல்வி அவர்களும் பொறுப்பேற்றுக் கொண்டனர்.

தேர்ந்தெடுக்கப்பட்ட புதிய நிர்வாகிகள் அனைவருக்கும் அ.வ.ந. பொதுநலச் சங்கத்தின் சார்பிலும் மற்றும் கல்வி வளர்ச்சிக் கழகத்தின் சார்பிலும் பொன்னாடை அணிவித்து கௌரவிக்கப்பட்டார்கள்.

விழாவினைத் தொடர்ந்து குழந்தைகளுக்கான விளையாட்டுப் போட்டியும், பெரியவர்களுக்கான கயிறு இழுத்தல் போட்டியும் நடைபெற்றது. விழாவில் கலந்து கொண்ட அனைவருக்கும் காலை, மதியம், இரவு மூன்று வேளைகளிலும் விருந்து உபசரிப்பு நடைபெற்றது. விழா ஒருங்கிணைப்பு அனைத்தையும் இளைஞர் பேரவை நிர்வாகிகள் மேற் கொண்டனர். நிகழ்ச்சிகள் அனைத்தையும் திருவாளர்கள் பிரகாஷ், ஜெயச்சந்திரன், ஆகியோர்களும், செல்விகள் சௌபர்ணிகா, ஆருத்ரா, ஆர்யாஸ்ரீ, அபூர்வா ஆகியோர்களும் சிறப்பாக தொகுத்து வழங்கினார்கள். விழாவில் கலந்து கொண்ட குழந்தைகளுக்கு சிறப்பு பரிசுகள் வழங்கப்பட்டன. 2020-ம் ஆண்டு முதல் இந்த ஆண்டு வரை கோவை நகரத்தார் பெருமக்களின் பள்ளி மாணவ மாணவிகள், கல்லூரியில் படித்துக் கொண்டிருப்போர், படித்து முடித்தவர்கள் ஆகியோர்களுக்கு பொன்னாடை அணிவிக்கப்பட்டு, பணமுடிப்பு மற்றும் சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டார்கள். பத்தாம் வகுப்பு மற்றும் 12-ம் வகுப்பில் முதல் மூன்று இடங்களை பிடித்த மாணவ மாணவிகள் மற்றும் 80% மேல் மதிப்பெண் பெற்ற மாணவ மாணவிகளுக்கு சங்கத்தின் சார்பில் கௌரவிக்கப்பட்டார்கள்.

திருமதி கலைச்செல்வி துரைசாமி அவர்களின் நன்றியுரையுடன், இரவு உணவுக்குப் பின் முப்பெரும் விழா இனிதே நடைபெற்றது.

**தகவல் : KS. பிரகாஷ், குரல் செய்தித் தொடர்பாளர், கோவை.**

# தீமை பயக்கும் துரித உணவுகள்





பீட்சா, பர்கர், நூடுல்ஸ் போன்ற பதப்படுத்தப்பட்ட உணவுகள் துரித உணவுகளின் செய்முறையும், அதில் சேர்க்கப்படும் வேதிப் பொருட்களும் உடலை கடும் மாற்றத்திற்கு உட்படுத்துகின்றன. இவை, குடலில் உள்ள நன்மை பயக்கும் நுண்ணுயிரிகளை அழிக்கிறது. இதனால், குடல் வழியாக வெளியேற்றப்படும் நச்சுப் பொருட்கள் ரத்தத்தில் உறிஞ்சப்பட்டு, எதிர்ப்பாற்றல் செயல்பாட்டை மாற்றுகிறது. மனித குடலில் வாழும் கோடிக்கணக்கான நன்மை செய்யும் பாக்டீரியாக்கள் உடலின் பல்வேறு செயல்பாடு களை, மூளைச் செயல்திறன் உட்படச் சீராக்குகிறது என்று சமீபத்திய ஆய்வுகள் உறுதிப்படுத்தி யிருக்கிறது. குடலில் அழற்சி ஏற்பட்டால் மொத்த உடல் உள்செயல்பாட்டிலும் எதிர்மறை மாற்றங்கள் ஏற்படும். அதனால் நமது பாரம்பரிய உணவான இட்லி, பொங்கல் போன்றவைதான் நல்லது.

**K. இளவரசி,** D.Pharm., **ரத்தினபுரி, கோவை.**

# கரிசாலை சுவை நீர்



100 மி.லி. நீரில் இருபது கரிசாலை இலைகளைப் போட்டு காய்ச்சி, வடிகட்டி, காய்ச்சிய பாலில் கலந்து தேவையெனில் சர்க்கரை சேர்த்து வெறும் வயிற்றில் குடிக்க சிறுநீரக செயலிழப்பு, அதிக இரத்தக் கொதிப்பு, புற்று நோய், காச நோய், வெண் புள்ளி, எலும்பு தேய்மானம் ஆகியன வராமல் தடுக்கும்.

**- K.S. சூர்யா B.E., புழுதிபட்டி (கோவை)**

# கல்விக் காவலர்கள்

1. **மே 2004 : முதல் கல்விக் காவலர், ஆமலூருடையார், தெய்வத்திரு. வெ.ராம. சுப்பிரமணியன் செட்டியார் – அன்னபூரணி ஆச்சி அவர்கள், அம்மன் குறிச்சி, சென்னை.**
2. ஜூலை 2004 : மேலூருடையார், **திரு. தே.மா. பழனிச்சாமி செட்டியார் – திருமதி. சரஸ்வதி ஆச்சி** அவர்கள், பொன்னமராவதி.
3. செப்டம்பர் 2006 : கழனிவாசலூருடையார் **திரு.நா. சுப்பிரமணியன்** BSc., CAIIB **திருமதி. தமிழ்ச்செல்வி** B.Lit., அவர்கள், கல்லம்பட்டி, சென்னை.
4. **மார்ச் 2007 : நாவலூருடையார், திரு. ச. கனகசபை B.E., மனோரஞ்சிதம்** அவர்கள், உலகம்பட்டி, திருச்சி.
5. ஜூலை 2007 : கழூகக்கூருடையார், **தெய்வத்திரு. இராம. வேலாயுதம் செட்டியார் – பார்வதி ஆச்சி** அவர்கள், படமிஞ்சி, சென்னை.
6. நவம்பர் 2007 : கழனிவாசலூருடையார், **தெய்வத்திரு. மு.சி.கி. நாராயணன் செட்டியார் – இராஜமாணிக்கம் ஆச்சி** அவர்கள்,கல்லம்பட்டி.
7. மே 2010 : சிக்கலூருடையார், **தெய்வத்திரு. நல்லாசிரியர் மெ. இளங்கோ – சாவித்திரி** அவர்கள். வா.புதூர்.
8. ஜூலை 2011 : அரும்பாக்கிளையார். திரு. **M.M. தியாகராஜன் B.Sc., தெய்வத் திருமதி. ஜோதிமணி** அவர்கள் புழுதிப்பட்டி. மதுரை.
9. ஜனவரி 2012 : பொன்னமராவதி பூண்டிலூருடையார். தெய்வத்திரு. மா. தங்கராஜன் – அழகுமீனாள் அவர்கள், புழுதிபட்டி பெங்களூரு.
10. மார்ச் 2012 : கழூகக்கூருடையார். **தெய்வத்திரு. மு.ஆ. இராமசாமி செட்டியார். தெய்வத்திருமதி. இராஜாமணி ஆச்சி,** சொக்கம்பட்டி.
11. மே 2012 : நாவலூருடையார், **திரு. ச. சொக்கலிங்கம் செட்டியார் – தெய்வத்திருமதி. தனபாக்கியம் ஆச்சி** அவர்கள் உலகம்பட்டி.
12. **ஜூலை 2012 : கழனிவாசலூருடையார். திரு. P.L. இராமஜெயம், பத்மாவதி அவர்கள், பொன்னமராவதி.**
13. செப்படம்பர் 2012 : கழூகக்கூருடையார். **தெய்வத்திரு.** M.S.M. **மாணிக்கம் செட்டியார் – சரஸ்வதி ஆச்சி** அவர்கள், பொன்னமராவதி.
14. **நவம்பர் 2012 : பணப்பாக்குழூருடையார். தெய்வத்திரு. கு. சொக்கலிங்கம் செட்டியார் - சொ. தேனம்மாள் ஆச்சி, செம்பூதி.**
15. மார்ச் 2013 - அரும்பாக்கிளையார், **தெய்வத்திரு. இராம. கதிரேசன் செட்டியார். திருமதி.முத்துலெட்சுமி ஆச்சி,** புழுதிப்பட்டி.
16. **மே 2013 : மேலூருடையார். தெய்வத்திரு. தே.மா. நாராயணன் செட்டியார் – சண்முகவள்ளி ஆச்சி,** பொன்னமராவதி.
17. ஜூலை 2013 : பூதமங்கலமூருடையார். **திரு. ச. இராமலிங்கம் – இராஜமாணிக்கம்,** அயனாவரம். சென்னை.
18. நவம்பர் 2013 : ஆமலூருடையார். **திரு. வெ.இராம.சுப. துரைராசு செட்டியார் – மீனாட்சி ஆச்சி,** அம்மன்குறிச்சி, சென்னை

19. ஜனவரி 2014 : நாவலூருடையார். **தெய்வத்திரு. அரு. வேலாயுதம் செட்டியார் – சம்பூர்ணம் ஆச்சி,** பொய்யாமணிப்பட்டி.

**20. மார்ச் 2014 : பூதமங்கலமுருடையார். திரு. R. பரமசிவம் B.E., தெய்வத்திருமதி. சிவகாம சுந்தரி, பொன்னமராவதி, சென்னை.**

**21. ஜனவரி 2015 : பூதமங்கலமுருடையார். திரு. அ.சொ. சண்முகம் செட்டியார் – ஜெயபாரதி ஆச்சி, அம்மன்குறிச்சி, திருச்சி.**

**22. மார்ச் 2015 : அரும்பாக்கிளையார். திரு. A.P. ஜெயபால் – புவனேஸ்வரி, பொன்னமராவதி, ஈராடு.**

23. ஏப்ரல் 2015 : கமுகக்கூருடையார், **தெய்வத்திரு. ம.வெ. நாராயணன் செட்டியார் – மீனாட்சி ஆச்சி** உலகம்பட்டி.

24. ஏப்ரல் 2015 : நாவலூருடையார். **திரு. சித. நடராஜன் செட்டியார், தெய்வத்திருமதி. இராஜம்மாள் ஆச்சி,** பொய்யாமணிப்பட்டி.

25. மே 2015 : நாவலூருடையார். **திரு. அரு.வே. மாணிக்கவேலு – சரஸ்வதி,** பொன்னமராவதி.

**26. ஜூலை 2015 : ஆமலூருடையார். திரு. வெ.இராம.சுப. செல்வம்** B.Sc., ACA., **– ஆனந்தம் ஆச்சி, அம்மன்குறிச்சி, சென்னை.**

27. ஜனவரி 2016 : அரும்பாக்கிளையார், தெய்வத்திரு. **மங்கைபாகன் செட்டியார் – சிகப்பி ஆச்சி,** புழுதிப்பட்டி.

28. மே 2016 : கமுகக்கூருடையார், **திரு. சி.சொ.மு. இராமையா செட்டியார் – தெய்வத்திருமதி. ஜெகநாதம் ஆச்சி,** கொன்னைப்பட்டி, தேனி.

29. செப்டம்பர் 2017 : ஆமலூருடையார். **திரு. வெ.இராம.சுப. நேசமணி செட்டியார் – அருள்நிதி புவனேஸ்வரி ஆச்சி,** அம்மன்குறிச்சி, சென்னை.

30. ஜனவரி 2018 : பணப்பாக்கூருடையார் **தெய்வத்திரு. சுப. மணிவாசகம் செட்டியார் – தேன்மொழி ஆச்சி,** காரைக்குடி.

31. செப்டம்பர் 2018 : கமுகக்கூருடையார் **திரு. சோம. கதிரேசன் செட்டியார் – தவமணி ஆச்சி,** பொன்னமராவதி, தொட்டாம்பாளையம்.

32. ஜூலை 2019 : அரும்பாக்கிளையார் **திரு. பொன். சிவஞானம் செட்டியார் – ராஜகுமாரி ஆச்சி,** சிறுகுடி.

**33. ஆகஸ்ட் 2019 : நாவலூருடையார் தெய்வத்திரு. சித. மாணிக்கம் செட்டியார் – அழகுமீனாள் ஆச்சி, பொய்யாமணிப்பட்டி.**

**34. ஆகஸ்ட் 2019 : வரதலூருடையார் ந. செல்வம் செட்டியார் – சிவயோகம் ஆச்சி, புழுதிபட்டி / கோவை.**

**35. ஜனவரி 2020 : பழனி ஆதிசைவ அன்னதான மடம் – அருள்மிகு பழனி ஆண்டவர் அறக்கட்டளை, பழனி.**

36. மார்ச் 2020 : மேலுருடையார் **தெய்வத்திரு. செ.பெ.அ. அலங்காரம் செட்டியார் – திருமதி. செம்பாயி ஆச்சி,** சிறுகுடி.

**37. அக்டோபர் 2020 :** பொன்னமராவதி **பூண்டிலூருடையார்**

திரு. சி. வெள்ளனச்சாமி செட்டியார் - திருமதி. சாந்தி ஆச்சி, சிறுகுடி / கோவை.

**38. டிசம்பர் 2020 : கழனிவாசலூருடையார் கிருங்காக்கோட்டை**

திரு. V. லட்சுமணன் செட்டியார் - பாக்கியலட்சுமி ஆச்சி தம்பதியர்

**39. மே 2021 :** மேலூருடையார் செம்பூதி/பொன்னமராவதி தெய்வத்திருவாளர்கள்

தே.மா. சுப்பையா செட்டியார்- சுப. பூங்கோதை ஆச்சி

40. **டிசம்பர் 2021 : பாளையூர் அம்பலம்கொண்டார் ஒடுவன்பட்டி/ தஞ்சை திரு மாணிக்கம் செட்டியார் - திருமதி சுசீலா ஆச்சி**

41. **பிப்ரவரி 2022 : கழுகக்கூருடையார் கிருங்காக்கோட்டை/கோவை தெய்வத்திருவாளர்கள் தேனப்பன் செட்டியார் - சந்திரா ஆச்சி**

# நம் சமுதாயத்தில் மேலும் மருத்துவர்கள்





நீடாமங்கலம், பூர்வீகம் சிறுகுடி - மேலூருடையார் **திரு அ. முருகன் செட்டியார் - திருமதி செல்வமணி ஆச்சி** இவர்களின் புதல்வி **அனுசோபியா** கீழ்பாக்கம் மருத்துவ கல்லூரியில் பயின்று இளங்கலை மருத்துவர் பட்டம் (M.B.B.S. honour in Physiology and Microbiology) 2022-ம் ஆண்டில் பெற்றுள்ளார்.




திண்டுக்கல் பூர்வீகம் சிறுகுடி **திரு சொ. தங்கராஜ் செட்டியார் - திருமதி சாந்தி ஆச்சி** இவர்களின் புதல்வி **த. ஆஷா** இவர் பொன்னமராவதி 2-வது கல்விக் காவலர் உயர்திரு **தே.மா. பழனிச்சாமி செட்டியார் - சரஸ்வதி ஆச்சி** ஆகியோர்களின் பேத்தி ஆவார்) மதுரை மருத்துவக் கல்லூரியில் பயின்று இளங்கலை மருத்துவர் பட்டம் (M.B.B.S.) 2022-ம் ஆண்டில் பெற்றுள்ளார்.

**தகவல் : திரு சொ. இளங்கோவன், தஞ்சாவூர்.**

டாக்டர் (M.B.B.S.) பட்டம் பெற்று நம் சமுதாயத்திற்கும், தங்களது பெற்றோர்களுக்கும் பெருமை தேடித் தந்துள்ள **Dr. ம. அனுசோபியா** மற்றும் **Dr. த. ஆஷா** ஆகியோர்களை பாராட்டுவதில் அ.வ.ந. கல்வி வளர்ச்சிக் கழகம் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறது. மேலும் பல சாதனைகள் புரிந்து சரித்திரம் படைக்க வாழ்த்துகிறோம்.

**- கல்வி வளர்ச்சிக் கழக நிர்வாகம்.**

# நம்மவர்களில் மேலும் இரு மருத்துவர்கள்



கோயம்புத்தூர் - குனிய முத்தூரில் வசித்து வரும் (பூர்வீகம் புழுதிபட்டி) வரதலூருடையார் கல்விக்காவலர் உயர்திரு **ந. செல்வம் செட்டியார் - திருமதி செ. சிவ யோகம் ஆச்சி** தம்பதியரின் மகன் உயர்திரு **ந.செ. அசோகன் - அன்புமீனாள்,** இவர்களின் மகள் செல்வி **Dr. செ.அ. யோகயாழினி M.B.B.S.** அவர்கள் தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரியில் பயின்று 22.06.2022 அன்று M.B.B.S. மருத்துவ பட்டம் பெற்றுள்ளார். இவர் பொன்னமராவதி **தெய்வத்திரு சித.கரு. சக்திவேல் செட்டியார் - நலமுடன் திருமதி ராஜலட்சுமி ஆச்சி** இவர்களின் பேத்தி ஆவார்.

**தகவல் : திரு ந.செ. அசோகன், கோவை**




கோயம்புத்தூர்-குனியமுத்தூரில் வசித்து வரும் (பூர்வீகம் புழுதிபட்டி) வரதலூருடையார் கல்விக்காவலர் **உயர்திரு ந. செல்வம் செட்டியார் - திருமதி செ. சிவயோகம் ஆச்சி** தம்பதியரின் மகன் உயர்திரு **செ. மாதவன் - மா. சுசீலா** இவர்களின் மகன் செல்வன் **Dr. மா. யோகேஷ் M.B.B.S** அவர்கள் சென்னை கேளம்பாக்கத்தில் உள்ள செட்டிநாடு மருத்துவக் கல்லூரியில் பயின்று 20-01-2022 அன்று மருத்துவம் பட்டம் பெற்றுள்ளார். இவர் குளத்துப்பட்டி தெய்வத் திருவாளர்கள் **வே. கருப்பையா செட்டியார் – கரு. ராஜாமணி ஆச்சியின்** பேரன் ஆவார்.

**தகவல் : திரு செ. மாதவன், குனியமுத்தூர்**

நம் சமுதாயத்திற்கும், தங்களின் பெற்றோருக்கும் பெருமை சேர்த்த **Dr. செ.அ. யோகயாழினி M.B.B.S** மற்றும் **Dr. மா. யோகேஷ் M.B.B.S** ஆகியோர்களை பாராட்டுவதில் அ.வ.ந. கல்வி வளர்ச்சிக் கழகம் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறது. மேலும் பல சாதனைகள் புரிந்து சரித்திரம் படைக்க வாழ்த்துகிறோம். **– கல்வி வளர்ச்சிக் கழக நிர்வாகம்**

# புதிய கல்விக்காவலர்கள்

## கல்விக்காவலர்-38



கழனிவாசலூருடையார்
திரு.V. லெட்சுமணன்செட்டியார்
பாக்கியலட்சுமிஆச்சி
கிருங்காக்கோட்டை

**பெற்றோர் :** திரு சொ.வைத்திங்கம் செட்டியார் - திருமதி அழகு ஆச்சி

**மாமனார்-மாமியார் :**
திரு. சிவசாமி செட்டியார்-குஞ்சரம் ஆச்சி, பூசாரிபட்டி

**உடன்பிறந்தவர்கள் :**

1. தெய்வத்திரு V.மங்கைபாகன்செட்டியார்-நலமுடன் பொன்னழகுஆச்சி
2. தெய்வத்திரு V. வைத்திங்கம்செட்டியார் - பாஞ்சாஆச்சி
3. தெய்வத்திரு V. ராமன்செட்டியார் - மங்களம்ஆச்சி
4. தெய்வத்திரு V. பரமசிவம்செட்டியார் - நலமுடன்கலாதேவிஆச்சி
5. திருV.ஆறுமுகம்செட்டியார்-சாந்தாஆச்சி, கோவை.

## கல்விக்காவலர்-39



**மேலூருடையார்**
**தே.மா.சுப்பையா செட்டியார்**
**சுப. பூங்கோதை ஆச்சி,**
பொன்னமராவதி.

**பெற்றோர் : திரு தே. மாணிக்கம் செட்டியார் தேனம்மாள் ஆச்சி**

**பெற்றோருக்கு பெருமை சேர்க்கும் மகள்கள் :**

1. திருமதி. **M.மாலதி** D. Pharm - திரு. **PL. முருகேசன்**
   **ஸ்ரீ முருகன் மெடிக்கல்ஸ்,**
   N.G.G.O. காலனி, கோவை-22.
2. திருமதி. **S. ஜெயந்தி**-திரு. **A. சண்முகநாதன்,**
   **நாகம்மாள் நோட்புக்ஸ்,** செல்வபுரம், கோவை-26

## கல்விக்காவலர்-40



பாளையூர் அம்பலம் கொண்டார்
**திரு ந. மாணிக்கம் செட்டியார் -**
**திருமதி சுசீலா ஆச்சி,**
தஞ்சாவூர்.

### கல்விக்காவலர் குடும்பத்தினர்

பெற்றோர்: தெய்வத்திரு A. சேதுராமன் செட்டியார் - நலமுடன் திருமதி சரோஜா ஆச்சி.

மகன் - மருமகள் :
திரு. M. அண்ணமலை - திருமதி. பவித்ரா.
பேத்திகள் மஹிரப்பிரியாள் & மிதுரப்பிரியாள்

மகள்-மருமகன் :
திருமதி S. அன்பு பிரியா - திரு S. சரவணன்.
பேத்தி யாஷினி.

## கல்விக்காவலர்-41



கமுகக்கூருடையார்
**திரு. தேனப்பன் செட்டியார் -**
**திருமதி சந்திரா ஆச்சி**
கோவை.

### கல்விகாவலர் குடும்பத்தினர்

**பெற்றோர் :** கிருங்காக்கோட்டை கமுகக்கூருடையார் தே. சொக்கன் செட்டியார்-மீனாட்சி ஆச்சி

**தேனப்பன் செட்டியார் சகோதரர்கள் / சகோதரி :**
பழனியப்பன் செட்டியார், சுப்பையா செட்டியார், ஞானம் & சகோதரி அழகு மீனாள் சிவலிங்கம். கோவை தேனப்பன்

**சந்திரா ஆச்சி சகோதரர்கள், சகோதரி :**
திரு. காசி அலங்காரம் செட்டியார், திரு. தர்மலிங்கம் செட்டியார், திரு. ராமசாமி செட்டியார், சகோதரி திருமதி சீதாலெட்சுமி ஆச்சி.





# 2021-2022-ல் பெருந்தொகை வழங்கிய நன்கொடையாளர்கள் 31.03.2022

**மாபெருங்கொடை வள்ளல்கள் :**

1. திரு. **A.P. ஸேதுராமன் – விஜயலட்சுமி,** கோவை.
2. திரு. **செல்வன் R.M. செந்தில்,** பொன்.புதுப்பட்டி.
3. திரு. **சொ. இராமநாதன் – சிவசக்தி** (செம்பதி) துபாய்.

**பெருங்கொடை வள்ளல்கள் :**

1. திரு. **சொ. வைத்திலிங்கம் செட்டியார் – பாப்பா ஆச்சி,** மதுரை.

**கொடை வள்ளல்கள் :**

1. திருமதி. **இராம. லதா அவர்கள்,** நத்தம்.
2. திரு. **து. அரவிந்த் குமார் B.E., M.S., PGDFM - பத்மா B.E.,** சென்னை.
3. தெய்வத்திரு. STKR. **சக்திவேல் – ராஜலெட்சுமி,** பொன்னமராவதி.

**வள்ளல்கள் :**

1. திரு. **M. பாலகிருஷ்ணன் – பானுமதி ஆச்சி,** சிங்கம்புணரி.
2. திரு. **செ. ஆசை அலங்காரம் குடும்பத்தார்,** சிறுகுடி.
3. திரு. **M.S. முருகப்பன்,** பொன்னமராவதி.
4. திரு. **சொ. முருகேசன் – கவிதா,** சிவகாசி.
5. திரு. A. முருகன் - செல்வமணி நீடாமங்கலம்
6. திரு. T.M.R.S. சிவக்குமார் – அருணோதயம், கோவை
7. திரு. ம.சி.கு.கு. கணேசன் செட்டியார் – தென்னசரசி ஆச்சி கோவை

**6-12 மாணவர்களுக்கு உதவித்தொகை வழங்கும் நன்கொடையாளர்கள்**

1. **சிங்கம்புணரி மீனாட்சி நல்லதம்பி வலச்சேரிப்பட்டி தெய்வானை வள்ளியப்பன்** நினைவாக அவந பொதுநலச்சங்கம், பிரான்மலை.
2. தெய்வத்திரு. **மு.அ. பரமசிவம் செட்டியார் – அங்கம்மாள் ஆச்சி** குடும்பத்தார், பொன்.புதுப்பட்டி.
3. திரு. **சொ. வைத்திலிங்கம் செட்டியார் – பாப்பா ஆச்சி** குடும்பத்தார், மதுரை.
4. திரு. **தே.மா. பழனிச்சாமி செட்டியார் – பழ. சரஸ்வதி ஆச்சி** குடும்பத்தார், பொன்.புதுப்பட்டி.
5. தெய்வத்திரு. **தீ.பழ. பொன்னுச்சாமி செட்டியார் – அன்னமயிலி ஆச்சி** நினைவாக **A.P. ஸேதுராமன் – விஜயலட்சுமி,** கோவை.

**தங்கப்பதக்கம் வழங்கும் நன்கொடையாளர்கள் : 10ஆம் வகுப்பு**

1. முதல் கல்வி காவலர் நினைவாக, கல்விக்காவலர், கல்வி தாய் தந்தை சுப.நேசமணி செட்டியார் – புவனேஸ்வரி ஆச்சி சார்பாக கேப்டன். நே. சரவணன் பிரியா – சச்சின் நங்கநல்லூர் – சென்னை – 61
2. **அருவியூர் வடக்குவளவு நகரத்தார் சங்கம்,** கோவை.
3. திரு. **ஆ. ஆறுமுகம் – சாந்தி,** கோவை.

**12ஆம் வகுப்பு**

4. திரு. **அரு.சோம. சண்முகநாதன் – சிவகாமி,** தூத்துக்குடி.
5. முதல் கல்வி காவலர் நினைவாக கல்விகாவலர். சுப. செல்வம் செட்டியார் ஆனந்தம் ஆச்சி சார்பாக செ.இளவரசன் – விசாலா. நங்கநல்லூர், சென்னை – 61



# புழுதிபட்டி

# ஸ்ரீ வில்லி விநாயகர் ஆலய வழிபாடு



கடந்த 05-06-2022 ஞாயிற்றுக்கிழமை அன்று புழுதிபட்டி ஸ்ரீவில்லி விநாயகர் ஆலயத்தில் திருவாளர்கள் M.S.S. தேவராஜன், சுப்பையா, சொக்கலிங்கம், சீனிவாசன் மற்றும் S. ரவி, தென்னவன் குடும்பத்தார்கள் மற்றும் திருவாளர்கள் M. சுரேஷ், ராஜ்குமார் குடும்பத்தார்கள், புழுதிபட்டி ஸ்ரீ வில்லி விநாயகப் பெருமானுக்கு வெள்ளி கவசம் அணிவித்து, பூஜைகள் சிறப்பாகச் செய்து வழிபட்டனர். விழாவில் கலந்து கொண்ட புழுதிபட்டி கிராம பக்தர்கள் அனைவருக்கும் அறுசுவையுடன் அன்னதானம் வழங்கப்பட்டது.

**தகவல்: திரு S. முத்து, பொருளாளர், கல்வி வளர்ச்சிக் கழகம்.**


**ஸ்ரீ மங்கைபாகர் தேனம்மை திருமண தகவல் மையம், கோவை**

இலவச சேவை-கட்டணம் இல்லை. பதிவிடுங்கள்

சமூகப் பெருமக்களே! பெற்றோர்களே!

மணமகன்-மணமகள் தேவைக்கு உரிய விவரத்துடன் தபால் அனுப்புங்கள். வரிசைப்படி நம்பர் பதிவு செய்து பதிவேட்டில் விபரம் எழுதி விரைவில் திருமணம் கைகூட வழி காண்பிக்கிறோம். 18-07-2006-இல் தொடங்கிய இச்சேவையில் பதிவானது 495. இணைந்த தம்பதிகள் 374. காத்து இருப்பது ஆண் - 102, பெண் - 19, ஆக 121. பெண் பதிவு மிக மிக குறைவு. பெண்வீட்டார்கள் முன் வந்து பதிவு கொடுத்தால் சமூக இனம் பெருக சமூகம் வளரும். பெண் வீட்டார்கள் ஒத்துழைப்பு கொடுக்க வேண்டுகிறோம்.



திரு. P.L. ரெங்கசாமி

பி.எல்.ஆர். திருமுருகன் ஸ்டோர்ஸ்
நெ. 18, எம்.கே.ஜி. லே அவுட்
ITI பின்புறம் GN மில்
கோயமுத்தூர் - 641 029.
செல் : 99523 49855

குறிப்பு : நேரில் வந்து கலந்து பேசினால் உடன் திருமணம் கைகூட வாய்ப்பு அதிகம்.

உ



சிறுகுடி தெய்வத்திரு எம். சண்முகம் பி.இ.
அவர்களின் நல்லாசியுடனும்,
பொதுமக்களின் பேராதரவுடனும்
8 -ஆம் ஆண்டாக வெற்றிநடை போடும்

# அர்ச்சனா ஜெனரல்ஸ்
# காளான்
## விற்பனை நிலையம்



**எங்களிடம் தங்கள் விசேஷத்திற்குத் தேவையான**



- பனீர்
- பட்டர்
- கோவா
- சீஸ்
- பால், தயிர்
- பேபிகார்ன்
- ஸ்வீட் கார்ன்
- ரெடிமேட் பூரி
- ரெடிமேட் புரோட்டா
- ரெடிமேட் சப்பாத்தி
- தண்ணீர் பாட்டில்
- ஐஸ்கிரீம்
- காளான் ஊறுகாய்
- ஸ்ரீதேவி பிரியாணி பேஸ்ட்
- Frozen Items

**ஆர்டரின் பேரில் ஏற்பாடு செய்து தரப்படும்.**

S. **பழனியப்பன்** B.E., © 90257 87637, 70107 91246



# அர்ச்சனா ஜெனரல்ஸ்
# காளான்
## நேரடி விற்பனை நிலையம்
**(மொத்தம் & சில்லரை விற்பனை)**

தலைமை தபால் நிலையம் எதிரில், ST கொரியர் அருகில்,
ஸ்கீம் ரோடு, திண்டுக்கல் - 624 001.

E-mail : archanaageneralsdgl@yahoo.in

## தஞ்சை அ.வ.ந. சங்க

# 34 வது ஆண்டு விழா & பொதுக்குழுக் கூட்டம்


வரவேற்றல்


தமிழ்த் தாய் வாழ்த்து


தலைவர் வரவேற்புரை


புதிய நிர்வாகிகள் 2022-25


திரு. P. **சிவன்ஜோதி** தலைவருக்கு
பொதுநலச் சங்கத்தலைவர் மரியாதை செய்தல்


புதிய தலைவருக்கு **(திரு. சொ. இளங்கோவன்)** -
பொதுநலச் சங்கத்தலைவர்
திரு **M.S. முருகப்பன்** வாழ்த்துதல்


தஞ்சாவூர் தலைவர் திரு. **P. சிவன்ஜோதி**
கல்வி வளர்ச்சிக் கழகத் தலைவர்
திரு. **செ. ஆசை அலங்காரம்**
அவர்களுக்கு மரியாதை செய்தல்


புதிய தலைவருக்கு (திரு. **சொ. இளங்கோவன்)**
கல்வி வளர்ச்சிக் கழகத் தலைவர்
திரு. **செ. ஆசை அலங்காரம்**
வாழ்த்துதல்

# கோவை அ.வ.நகரத்தார் சங்கம்

## முப்பெரும் விழா








## துபாயில் தமிழ்ப் பெண்கள் சங்கத்தின் புதிய தலைவியாக

(கல்வி வளர்ச்சிக் கழகத்தின் மாபெருங் கொடைவள்ளல்)

# திருமதி சிவசக்தி இராமநாதன்

## அவர்கள் தேர்வு






ஐக்கிய அரபு அமீரகத்தின் துபாய் நகரில் சமூக மேம்பாட்டு ஆணையத்தின் அங்கீகாரம் பெற்ற தமிழ்ப் பெண்கள் சங்கத்தின் புதிய நிர்வாகிகள் மற்றும் கமிட்டி உறுப்பினர்கள் அறிமுகக் கூட்டம் பர்துபாய் பகுதியில் உள்ள பனோரமா ஓட்டலில் நடைபெற்றது.

தமிழ் பெண்கள் சங்கத்தின் புதிய தலைவியாக திருமதி **சிவசக்தி இராமநாதன்** அவர்களும் மற்ற உறுப்பினர்களும் அறிமுகப்படுத்தப்பட்டனர்.

தகவல்: **திரு. சோனா இராம்,** இணைத் தலைவர்,
அ.வ.ந. கல்வி வளர்ச்சிக் கழகம், பிரான்மலை.

துபாய் வாழ் தமிழ்ப் பெண்கள் சங்கத்தின் புதிய தலைவியாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நமது கல்வி வளர்ச்சிக் கழகத்தின் மாபெருங் கொடைவள்ளல் செம்பூதி (துபாய்) திரு சோனா இராம் அவர்களின் துணைவியார் திருமதி சிவசக்தி இராமநாதன் அவர்களை அருவியூர் வடக்குவளவு நகரத்தார் கல்வி வளர்ச்சிக் கழகம் பாராட்டி கடல் கடந்தும் நம்மவர் செய்யும் பொதுநலத் தொண்டு சிறக்க வாழ்த்துகிறது.

**- கல்வி வளர்ச்சிக் கழக நிர்வாகிகள்**

செம்பூதி மேலூருடையார்
திரு. M. கெங்கேஸ்வரன் செட்டியார்- திருமதி. விஜயலெட்சுமி ஆச்சி
இல்ல திருமண விழா கொண்டாட்டம்

மணமக்கள்:
திருநிறைச்செல்வி **G. சிவசக்தி** -
திருநிறைச்செல்வன் **G. மணிகண்டன் (எ) விஜய்கணேஷ்**
மணநாள்: 19-05-2022, வியாழக்கிழமை
இடம்: மங்கைநாயகர் மன்றம் பொன்னமராவதி



**மணமக்கள் பல்லாண்டு**
**வாழ்க வளமுடன்! வாழ்க நலமுடன்!**

அன்புடன்
**V. சிவகுமார், S. கனிமொழி**
மகன்: **S. சூரியா**
**ஸ்ரீ அம்பாள் பார்மஸி, கோயமுத்தூர்**

# திருமூலர் திருமந்திரம்



### பாடல் 145 முதல் தந்திரம் - 2

## யாக்கை நிலையாமை

ஊரெல்லாம் கூடி ஒலிக்க அழுதிட்டுப்
பேரினை நீக்கிப் பிணமென்று பேரிட்டுச்
சூரையங் காட்டிடைக் கொண்டுபோய்ச் சுட்டிட்டு
நீரினில் மூழ்கி நினைப்பொழிந் தார்களே!

வழிமந்திரம் (என் பாடல்)
(நேரிசை வெண்பா)

நெஞ்சில் நிறைந்த நினைவுகள் மூழ்கிட
தஞ்சமாய் வேகும் தணலிலே மிஞ்சும்
உறவும் விலகும், உலகம் மறந்து
உறங்கும் உடலை உணர்

**பொருள் :**

ஊரெலாம் கூடி அழுதவர்கள் இறந்தவரின் பெயர் நீக்கி பிணம் என்றே சொல்லுவார்கள். ஆதலால் அவர் பெயர் நீங்கிவிட்டது. இறந்தவர் உடலைச் சுடுகாட்டில் எறித்து விட்டு; அதன் பிறகு வீட்டிற்கு வந்து குளிப்பது மற்றும் பிற சடங்குகள் செய்வார்கள். அவற்றுடன் இறந்தவர்களின் நினைவையும் மக்கள் மறந்து விடுகின்றனர். இதுவே இறந்தவரின் நிலை என்று திருமூலர் குறிப்பிடுகிறார். இவனுக்கு இன்று, நாளை நமக்கு என்பதை மறந்து விடுகின்றனர்.

இந்த முன்னோர் வழி சிந்தித்தால் பிறவியின் அருமை தெரியவரும். இதுவரை நாம் கடந்து வந்த பாதைகள் வழி தவறினாலும் இனி இனிதுடையது ஆக்குவோம்! புதியதோர் உலகம் செய்வோம்!

# அவையடக்கம்



பாடல் 96 பாயிரம் 6

பாடவல் லார்நெறி பாட அறிகிலேன்
ஆடவல் லார்நெறி ஆட அறிகிலேன்
நாடவல் லார்நெறி நாட அறிகிலேன்
தேடவல் லார்நெறி தேட கில்லேனே

## வழி மந்திரம் (என் பாடல்)
(நேரிசை வெண்பா)

பாடியே நீயும் பயின்றிடு ஈசனைத்
தேடியே சென்றிடு தென்னவனை நாடியே
ஓடி அவன்பாதம் ஒன்றிடு என்றுமே
கூடி மகிழ்ந்து குலவு

பொருள்:

இறைவனைத் துதித்து பாடல்களை இசைத்துப் பாடி அவனருளைப் பெறக் கூடியவர்களின் வழியை அறியாதவன் யான் இறைவனை ஆனந்தக் கூத்தாடி அவனருளைப் பெறக்கூடியவர்களின் வழியை அறியாதவன் யான் இறைவனை உண்மையான அன்போடு நாடிச் சென்று அவனருளைப் பெறக் கூடியவர்களின் வழியை அறியாதவன் யான். இறைவன் எங்கே இருக்கிறான் என்று தேடி அலைந்து அவனைத் தமக்குள்ளே கண்டு அவனருளைப் பெறக் கூடியவர்களின் வழியை அறியாதவன் யான் அப்படிப்பட்ட எம்மை ஆட்கொண்டு அவனை முழுவதும் அறிய வைத்தது எம்பெருமான் சதாசிவமூர்த்தியின் பேரருளே!

வாழ்க வளர்க தமிழ்!
**ம.சி.கு.கு. கணேசன்,**
**கோவை.**

# சிவபாதம் சேர்ந்தார்

நாலு கரணங்களும் ஒன்றாய், நல்ல அறிவு மேற்கொண்டு,
காலும் பிரம்மநாடி வழிக் கருத்துச் செலுத்தி,
கபாலநடுஏலவே முன்பயின்ற நெறி, எடுத்த மறை மூலம் திறப்ப
மூலமுதல்வர் திருப்பாதம் அணைவார், கயிலை முன் அடைந்தார்.

திருமுறை



கோவை கணபதி திரு S.A. கணேசன் செட்டியார் அவர்களின் மனைவி **திருமதி மயிலம்மாள்** (58) 03-05-2022 அன்று இறைவனடி சேர்ந்தார்கள்.

---



ஆலவயல் ஞானேஸ்வரன் என்ற ராஜா - நாகலெட்சுமி மகனும், திருமதி முத்துமயிலி ஆச்சியின் பேரனுமான **மணிகண்டன்** (வயது 21) 29-04-2022 அன்று இறைவனடி சேர்ந்தார்.

**தகவல் : திரு பழ. சொக்கலிங்கம், செய்தித் தொடர்பாளர், ஆலவயல்**

---



மதுரை K. புதூர் சி. அருணாசலம் (பூர்வீகம் சிறுகுடி) செட்டியார் இரண்டாவது மகன் **திரு A. மனோகரன்** (வயது 43) இருகூர், ஒண்டிபுதூர், கோவை அவர்கள் 9-05-2022 அன்று இறைவனடி சேர்ந்தார்கள்.

**தகவல்: திரு A. சந்திரமோகன், மதுரை**

---



புழுதிபட்டி தெய்வத்திரு மணிவாசகம் செட்டியார் மகனான, கோவை வரதராஜபுரம் இஎஸ்ஐ மணி மெடிக்கல் உரிமையாளர் திரு K.M. சேகர் அவர்கள் 26.5.2022 அன்று இறைவனடி சேர்ந்தார்கள்

**தகவல்: திரு S. முத்து, பொருளாளர், கல்வி வளர்ச்சிக் கழகம்.**

---



சென்னை மு.சி. நாராயணன் (பூர்வீகம் கல்லம்பட்டி) செட்டியாரின் மகன் திரு நா. ஜெயராமன் (முன்னாள் கல்வி வளர்ச்சிக் கழக தணிக்கையாளர்) 10-06-2022 அன்று சென்னை அண்ணாநகரிலுள்ள அவரது இல்லத்தில் இறைவனடி சேர்ந்தார்கள்.

தகவல் : திரு நா. சுப்பிரமணியன், சென்னை.

---

தங்களது உறவுகளை இழந்து தவிக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், வருத்தத்தையும் தெரிவித்துக் கொள்வதோடு இறைவனடி சேர்ந்தோர்களின் ஆன்மா சாந்தி அடைய வேண்டுகிறோம். **– குரல் நிர்வாகம்**

---




கட்டணம் இல்லா சேவை!

நமது தஞ்சை சங்க நகரத்தார் பெருமக்களுக்கு!...

இறுதி ஊர்வல வண்டியும்,
குளிர்சாதனப்பெட்டியும்,
கட்டணம் இல்லாமல் வழங்குகிறோம்
பயன்படுத்திக்கொள்ளவும்.

சொ. இளங்கோவன், D.Pharm.,
தலைவர், தஞ்சை அருவியூர் வடக்குவளவு நகரத்தார் சங்கம்
தொடர்புக்கு :- 94434 54173, 86673 26795

# ஏழரைச் சனி காலத்தில் கஷ்டம் தான் நடக்குமா? கல்யாண யோகம் தருவாரா சனிபகவான்?



ஏழரைச் சனியால் திருமணம் தடைபடுமா? அல்லது ஏழரைச் சனியின் காலத்தில் திருமணம் செய்யலாமா? என்பது பலரது சந்தேகமாக இருக்கிறது. ஏழரைச் சனி காலம் என்பது மனிதர்களுக்குப் பல அனுபவங்களைக் கற்றுக்கொடுக்கும் காலம். சனிபகவான் ஏழரை ஆண்டுகள் ஒருவருக்கு பலவித கஷ்டங்களைக் கொடுத்து வாழ்க்கை பாடத்தை புரிய வைப்பார். திருமணம் என்பது மனித வாழ்க்கையில் அவசியமான ஒன்றாகும், ஜாதகத்தில் தோஷம் இருந்தால் சிலருக்குத் திருமணத்தடை ஏற்படும். குரு பலன் வந்தாலோ, குரு பார்வை ராசிக்குக் கிடைத்தாலோ கல்யாண யோகம் கை கூடி வரும். தவறு செய்பவர்களுக்கு அவரவர் செய்த பாவத்திற்கு ஏற்ப, தண்டனைகளைக் கொடுப்பவர் சனி பகவான். எனவே தான் சனி பகவான் நீதிமான் என்று அழைக்கப்படுகிறார்.

கும்ப ராசியில் சனிபகவான் இப்போது ஆட்சி பெற்று பயணம் செய்கிறார். சனிபகவானின் பார்வை மேஷம், சிம்மம், விருச்சிகம் ராசிகளின் மீது விழுகிறது. மகரம், கும்பம், மீனம் ராசிக்காரர்களுக்கு ஏழரை சனி காலமாகும். ஏழரைச் சனியின் காலத்தில் திருமணம் செய்யலாமா? ஏழரைச் சனியால் திருமணம் தடைபடுமா? என்பது பலரது சந்தேகமாக இருக்கிறது. ஏழரைச் சனிக்கும், மனித வாழ்விற்கும் நெருங்கிய சம்பந்தம் உண்டு. சனிபகவான் கொடுப்பதைத் தடை செய்யும் அதிகாரம், வேறு எந்த கிரகத்திற்கும் கிடையாது.

சனி கிரகம் ஒரு ராசியைக் கடக்க இரண்டரை ஆண்டுகள் ஆகிறது. ராசிச் சக்கரத்தை ஒரு சுற்று சுற்றி வர, தோராயமாக 30 ஆண்டுகள் ஆகிறது. அதனால் பெரியவர்கள் பேச்சு வழக்கில் 30 வருடம் வாழ்ந்தவரும் இல்லை, 30 வருடம் தாழ்ந்தவரும் இல்லை என்பார்கள். இது சனிபாகவானின்

சஞ்சாரத்தை வைத்தே சொல்கின்றனர். 30 ஆண்டுகளுக்குப் பிறகு கும்ப ராசியில் சனிபகவான் பயணம் செய்கிறார்.

**சனிபகவான் தரும் சங்கடங்கள்:**

கோச்சாரத்தில் சனிபகவான் ராசிக்கு 3,6,11 ஆகிய இடங்களில் சஞ்சரிக்கும் காலங்களில் முன்னேற்றமான பலன்களையும், ராசிக்கு 1,2,4,7,8,12 ஆகிய இடங்களில் சஞ்சரிக்கும்போது சற்று ஏற்றம் இறக்கம் நிறைந்த சுப-அசுப பலன்களையும் தருவார். ஏழரைச் சனி என்பது ராசிக்கு 12,1,2 ஆகிய இடங்களில் சனி பகவான் சஞ்சரிக்கும் காலம் ஆகும். ஜென்ம ராசிக்கு 12-ஆம் வீடான விரைய ஸ்தானத்தில் சனி சஞ்சரிக்கும் காலம் விரயச் சனி என்றும், ஜென்ம ராசியில் சனிபகவான் சஞ்சரிக்கும் காலம் ஜென்ம சனி என்றும், ராசிக்கு 2-ஆம் வீட்டில் சனிபகவான் சஞ்சரிக்கும் காலத்தை பாத சனி அல்லது குடும்ப சனி என்று அழைக்கப்படுவார்.

சனிபகவான் ராசிக் கட்டத்தை ஒரு முறை வலம் வரும் 30 ஆண்டுகள் ஒரு ராசியை தன் பிடிக்குள் வைத்திருப்பார். அதன்படி மனிதனின் சராசரி ஆயுள் காலமாக 60 ஆண்டுகளில் 2 சுற்று வலம் வரும் சனி பகவான் ஒருவரை 30 ஆண்டுகள் தன் பிடியில் வைத்து, ஒருவரின் கர்ம வினைக்கு ஏற்ப, ஏற்ற இறக்கத்தைத் தந்து வாழ்வின் தத்துவத்தைப் புரிய வைப்பார்.

பலருக்குத் திருமணம் குழந்தை பாக்கியம், வீடு, வாகனம் போன்ற பல்வேறு சுப விஷயங்கள் நடைபெறுவது ஏழரைச் சனியின் காலத்தில்தான் என்பது மறுக்க முடியாத உண்மை. பல வருடங்களாக தடைபடும் திருமணம், குழந்தை பாக்கியம் உள்ளிட்ட பல சுப நிகழ்வுகள், சனியின் பிடியில் இருக்கும்போது எந்த தடையும் இன்றி எளிமையாக நடந்து முடிந்துவிடும்.

சராசரியாக பெண்களுக்கு 21 வயதிலும் ஆண்களுக்கு 23 வயதிலும் திருமணம், குழந்தை பாக்கியம் போன்ற சுக, போகங்களை அனுபவிக்கும் பாக்கியம் ஆரம்பமாகும். திருமணம் என்ற பந்தத்தில் ஆண், பெண் இருவரின் கர்ம வினைகளும் கலந்து பூர்வ புண்ணிய, பாக்கிய ஸ்தானங்கள்

முழுமையாக இயங்கும். ஒரு ஆணுக்கு ஏழரைச் சனி நடைபெறும் காலகட்டத்தில் அவருக்கு குடும்பம் என்றால் என்ன? மனைவி, குழந்தைகளுக்கு, ஒரு மனிதன் நிறைவேற்ற வேண்டிய கடமைகள் என்ன? உழைப்பின் அவசியம், உழைப்பால் உயரும் நெறிமுறை போன்ற பல்வேறு வாழ்க்கை தத்துவங்களை சனிபகவான் புரிய வைப்பார்.

அதே போல் பெண்களுக்கு கணவர் மற்றும் புகுந்த வீட்டாருடன் எப்படி அனுசரித்து வாழ்வது? கணவனின் பொருளாதாரத்தில் எப்படி குடும்பம் நடத்த வேண்டும்? குழந்தைகள் எப்படி பராமரிக்க வேண்டும் என்பது போன்ற இல்வாழ்க்கை உண்மைகளை புரிய வைப்பார். எனவே பாவம் செய்தவர்களுக்கு ஏழரை சனி காலத்தில் கஷ்டங்களைக் கொடுக்கும் சனிபகவான், நல்லவர்களுக்கு நல்ல வேலை, நல்ல குடும்ப வாழ்க்கையை கொடுப்பார்.

சனிபகவான் - சனீஸ்வரன் என ஈஸ்வர பட்டம் பெற்றவர். நாம் செய்த நன்மை தீமைக்கு ஏற்ப தர்மத்தின் வழி நின்று நீதி வழங்கும் நீதிமான்.

**S. அமுதா, மடிப்பாக்கம், சென்னை.**

---


**கொட்டாம்பட்டியில் ஓர் இனிய உதயம்**
**5.3.2020 முதல் - பேருந்து நிலையம் எதிரில்**





# மன அமைதி கிடைக்க

இறைவனிடத்தில் முழுமையாகச் சரணடைந்து விட்டால் அமைதியும், ஆன்மிக உணர்வும் கிடைக்கும், அந்நிலையில் நம் குறைகளைப் பற்றி முறையிடும் எண்ணம் தோன்றாது. முழுமையான பக்தியின் இயல்பு இதுதான். நாம் விரும்பும் அனைத்தையும் பகவான் நமக்குத் தருவார் என்ற எண்ணத்தில் உறுதி இருந்தால் மனம் தெளிவடையும். அப்போது தவறு செய்ய இடம் உண்டாகாது.

புதிய ஆசைகளை வளர்த்துக் கொண்டும், புதிய விஷயங்களைத் தேடி அலைந்தும் தான் நாம் மேலும் மேலும் புதிய புதிய துன்பத்தில் மாட்டிக் கொள்கிறோம். நம் வாழ்வுக்கு கடவுளே பொறுப்பானவர் என்ற நம்பிக்கையோடு முழுமையாக அவரிடம் நம்மை அர்ப்பணிப்பதே சரணாகதி, கடவுளிடம் சரணடைந்து விட்டேன் என வெறும் வார்த்தையை மட்டும் உதிர்த்து பயனில்லை. உளப்பூர்வமாக அவரிடம் சரணடைய வேண்டும்.

இரண்டு வித மனங்கள் இல்லை, இருப்பது ஒன்று தான், நல்ல எண்ணங்களைச் சிந்தித்தால் அது நல்லமனம். தீய எண்ணங்களைப் பற்றிக் கொண்டால் அது கெட்டமனம். நாம் நம் உள்ளத்தை தூய்மையாக வைத்துக் கொள்வதிலேயே கவனமாக இருப்போமேயானால் பணிவு என்பது வார்த்தையிலும், நடைமுறையிலும் மிகுந்த எளிமையாக வந்து விடும். மனத்தூய்மையில்லாதவர் செய்யும் வணக்கம், வழிபாடு எல்லாம் ஒரு மேம்போக்கிற்காக மட்டுமே இருக்கும்.

நாம் முக்தியடைய விரும்பினால் முதலில் நல்ல ஒரு குருவை நாட வேண்டும். இது அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஓர் உண்மை. உள்மனதில் நிலையான அமைதியை யார் ஏற்படுத்துகிறார்களோ, அவரைக் குருவாக ஏற்றுக் கொள்ளுங்கள். கடவுளும், குருவும் உண்மையில் வேறு வேறு அல்ல. புலி வாயில் பிடிபட்டது எப்படி திரும்பாதோ,

அதேபோல் குருவின் அருட்பார்வையில் விழுந்தவர்களும் கைவிடப்படமாட்டார்கள்-**ரமண மஹரிஷி.**

கடவுளும் குருவும் தான் முக்தி அடைவதற்கான வழியைக் காட்டுவார்கள். கடவுளிடமோ, குருவிடமோ சரணடைந்துவிட்டால், அவரது அருளே நம்மைச் சரியான பாதையில் அழைத்துச் செல்லும். அதன்பின் நாம் எதற்கும் கவலைப்படத் தேவையில்லை. நாம் அவர்கள் காட்டிய வழியில் தவறாமல் சென்றால் போதும். அமைதியே நமது இயல்பான சுபாவம். எனவே அதைத் தேட வேண்டாம். உபத்திரவப்படுத்தும் எண்ணங்களை ஒழித்தாலே போதும். மனதை மெதுவாக சிறகுச் சிறு அடக்கி தன் வழிக்குக் கொண்டு வரவேண்டும். இதற்கு கடும் பயிற்சியும், வைராக்கியமும் தேவை. நாமே தான் நமது பிரச்சனைகளுக்கு மூலகாரணம். எனவே, நாம் யார் என்பதை நன்கு புரிந்து கொண்டால், கடவுள் யார் என்பது நன்கு விளங்கும். அறிவு, நம்மிடத்திலுள்ள அறியாமையைப் போக்குகிறது. அது புதிதாக எதையும் உருவாக்குவதில்லை. குழப்பமில்லாத மனமே அமைதியின் பிறப்பிடம். அமைதியில் தான் ஆனந்தம் இருக்கிறது.

**– திருமதி ஆனந்த செல்வம், நங்கநல்லூர், சென்னை.**

## பூப்புனித நீராட்டு விழா

தஞ்சாவூர், பூர்வீகம் சிறுகுடி **திரு சொ. இளங்கோவன் செட்டியார் – திருமதி வளர்மதி ஆச்சி,** (கல்வி வளர்ச்சிக் கழக நிர்வாகக் குழு உறுப்பினர்) இவர்களின் புதல்வி செல்வி **இ. வர்ஷினி B.A. (Hindi)** என்பாருக்கு 05-06-2022 ஞாயிற்றுக்கிழமை அன்று சிறுகுடி அருவியூர் வடக்குவளவு நகரத்தார். மன்றத்தில் பூப்புனித நீராட்டு விழா சுற்றும் சூழ வாழ்த்த இனிதே நடைபெற்றது.

**தகவல் : திரு சொ. இளங்கோவன் D.Pharm., தஞ்சாவூர்.**

ESTD : 1991

உ

ஸ்ரீ மங்கைநாயகர் தேனம்மை சுவாமிகள் துணை

நம் நகர பெருமக்களுக்கு நல்வாழ்த்துக்கள்

Off : 0461 - 2328501
Res : 0461 - 2328502
91711 70000

SARC

# ஸ்ரீ அலங்கார் ரெக்சின் சென்டர்

**Dealers in :**

**Rexine, Furniture and Furnishing Materials**

**ஒரு வருட உத்திரவாதத்துடன் தேக்கு மரக்கட்டில் - டபுள் மற்றும் மெத்தை ரூ. 15,100/- மட்டும்.**
**(தமிழகம் முழுவதும் டெலிவரி செய்யப்படும்).**

247-C/4, Palayamkottai Road, Near Old Bus-Stand, Tuticorin-628 002.
E-mail : alankarexine@gmail.com    www.tuticorinalankarrexine.com

AB

# ஸ்ரீ அலங்கார் பில்டர்ஸ்

Structural Engineer ❖ Licensed Surveyor in Tuticorin City Municipal Corporation
❖ Panel Valuer in Tuticorin District Central Co.op. Bank Ltd.,

**கட்டிட வரைபடம், வடிவமைப்பு, முகப்புதோற்றம்,**
**கட்டிட மதிப்பீடு, வரைபட அனுமதி சான்று, வாஸ்து முறைப்படி கட்டிடங்கள்**
**சிறந்த முறையில் செய்து தரப்படும்.**

71-5, Balavinayagar Kovil Street, Upstairs Sri Alankar Rexine Centre,
Tuticorin- 628 002.
Email : tutyalankarbuilders@gmail.com    www.tuticorinalankarrexine.com

நம் சமூக பணியில்...,

**அரு. சோம சண்முகநாதன்**
**S. சிவகாமி**
**S. சசிகுமார்** B.A.,DECM.,
**Er. S. பிரஹலாதன்** M.E.,
**பூதமங்கலமுருடையார், உலகம்பட்டி.**

# சஷ்டியப்த பூர்த்தி விழா



திருக்கடையூர் ஸ்ரீ அமிர்தகடேஸ்வரர் ஸ்ரீ அபிராமி அம்மன் திருக்கோவிலில் 22.06.2022 புதன்கிழமை அன்று திண்டுக்கல் திரு N. ஜெகநாதர் செட்டியார் - கண்மணி ஆச்சி இவர்களின் சஷ்டியப்த பூர்த்தி எனும் மணி விழா இனிதே நடைபெற்றது. **தகவல் : திரு N. ஜெகநாதர் செட்டியார், திண்டுக்கல்.**

**மணிவிழா** காணும் **திரு N. ஜெகநாதர் செட்டியார்– கண்மணி ஆச்சி தம்பதியர்** நிறைந்த செல்வமும், நல் ஆரோக்கியமும் பெற்று நீடுழி வாழ்ந்திட வாழ்த்துகிறோம்.

**– கல்வி வளர்ச்சிக் கழக நிர்வாகிகள்**





# திருமணமான பெண் தன் தாய்க்கு எழுதிய கடிதம்

அன்புள்ள அம்மா,

எல்லா பெண்களைப் போலவே கல்யாண கனவில் களித்து மனதைக் கொள்ளை யடித்தவரை உங்கள் சம்மதத்துடன் குதூகலமாக, ஆடம்பரமாக திருமணம் புரிந்து கொண்டேன். பின்னர் தான் தெரிந்தது வாழ்க்கை சினிமாவில் போடும் சுபத்திற்கு பின்பு தான் தொடங்குகிறதென்று. வாழ்க்கையில் விரும்புவது, விரும்பப்படுவதென்பதையும் தாண்டி நிறைய இருக்கிறது என்று தெரிய வருகிறது.

எத்தனை பொறுப்புகள், எத்தனை சுமைகள், எத்தனை எதிர்பார்ப்புகள், எத்தனை தியாகங்கள், எத்தனை ஏமாற்றங்கள். நினைத்த நேரத்தில் நிம்மதியாக தூங்க முடிவதில்லை, முழு தூக்கம் கலைந்து, நேரத்தில் எழுந்திருக்க முடியவில்லை. குடும்பத்தில் மற்றவர் விழிக்கும் முன் நான் விழித்து என் வேலைகளை ஆரம்பிக்க வேண்டி இருக்கு... உன்னோடு இருந்த நாட்களில் எனக்கென்ற விருப்பமான உடைகளில் சிட்டாக பறந்து கொண்டிருந்தேன். இங்கே அவர்கள் விரும்பிய உடையில் வலம் வருவதையே விரும்புகின்றனர்.

இதோ என் தோழியை பார்த்து விட்டு வருகிறேன் என்று உன்னிடம் சொல்லிவிட்டு சென்றது போல் சொல்லி செல்ல இயலவில்லை... என் தேவைகளை விட அடுத்தவர் தேவைகளை முன் வைத்தே நான் நடந்து கொள்ள வேண்டி இருக்கு. நினைத்த நேரத்தில் தூங்க கூட முடிவதில்லை... எனக்கு விருப்பமான டிவி நிகழ்ச்சியைக் கூட பார்க்க முடிவதில்லை.

சில நேரங்களில் எதற்கு இந்த திருமணம் என்று அலுப்பாக இருக்கிறது... இந்தத் திருமணம் என் சுதந்திரத்தை அல்லவா பறித்து விட்டது. என் சுகத்தை அல்லவா சூறையாடி விட்டது. உன்னிடம் இருந்த போது மிக மகிழ்வாக இருந்தேனே! உன்னிடம் திரும்ப வந்து விடலாமா என்று கூட தோன்றுகிறது. உன் மடியில் படுத்து கொள்ளனும் போல இருக்கிறது. வேண்டாம் வேண்டாம் என்று நான் சொல்ல.. ஒரே ஒரு இட்லி போட்டுக்கோ.. உனக்கு பிடிக்குமேன்னு பால்கோவா செஞ்சென்னு நீ பின்னாலயே வந்து வந்து ஊட்டி விடுவதை கொஞ்சிக் கொள்ள வேண்டும் போலிருக்கிறது.

எந்தக் கவலையும் இல்லாமல் உன் அரவணைப்பில் உன் கொஞ்சலில் உன் பாதுகாப்பிலேயே இருந்திருக்க கூடாதா என்று தோன்றுகிறது. ஆனால் அடுத்த கனமே நீயும் என் வயதில் என்னை மாதிரி தானே உணர்ந்திருப்பாய்.. நீ உன் திருமணத்தில் செய்த தியாகங்கள் தானே எனக்கு இந்த அழகிய நினைவுகளைக் கொடுத்திருக்கிறது. நீ அன்று, நான் இன்று நினைப்பது போல் நினைத்திருந்தால் நான் இன்று இருப்பேனா... நீ செய்த தியாகங்களையும், உழைப்பையும், பாசத்தையும், எதிர்பாரா அன்பையும் நான் திருப்பித் தர வேண்டாமா... என்று நினைத்துக் கொள்கிறேன். அதுவும் உன்னிடமிருந்து கற்றது தான்.. அப்படி நினைக்கும்போது வாழ்க்கையே எளிதாகத் தெரிகிறது. தெளிவாக புரிகிறது. காலம் செல்ல செல்ல நீ உன் குடும்பத்தை நேசித்தது போல நானும் என் குடும்பத்தை நேசிக்க ஆரம்பித்து விடுவேன். நீ செய்த தியாகங்களை நானும் செய்ய தயாராகி விடுவேன்... உனக்கு நாங்கள் கொடுத்த மன உறுதியை, திடத்தை என் குடும்பமும் எனக்குத் தரும். ஆமாம் மா! நீ எனக்கு கொடுத்ததை நானும் என் குடும்பத்திற்கு கொடுக்க தயாராகி விட்டேன்.

இந்த நினைவோடு குடும்ப பெண்கள் இருக்க வேண்டும். இவர்களின் உணர்வுகளுக்கும் எண்ணங்களுக்கும் கணவன் மற்றும் அவளின் குடும்பத்தினர் மதிப்பளித்து வாழ்ந்தால் இல்லறம் நல்லறமாய் இனிக்கும் என்பது திண்ணம்.

**S. ஆசை அலங்காரம், தலைவர், கல்வி வளர்ச்சிக் கழகம்.**



# கிரஹப்பிரவேசம்

தஞ்சாவூர் **திரு ச.அ. மாணிக்கம் செட்டியார் - திருமதி கோமதி ஆச்சி** இவர்களால் பிள்ளையார்பட்டி ஊராட்சி ரவுண்டானா அருகில் புதிதாக கட்டப்பட்ட புதுமனை புகுவிழா 13-06-2022 அன்று சிறப்பாக நடைபெற்றது.

**தகவல் : திரு சொ. இளங்கோவன் D.Pharm., தஞ்சாவூர்**

# S.S. இல்ல பூப்புனித நீராட்டு விழா

பொன்-புதுப்பட்டி S.S. ஆயில் ஸ்டோர் உரிமையாளர் தெய்வத்திரு T.MR. சுப்பிரமணியன் செட்டியார் - நலமுடன் சரோஜா தேவி ஆச்சி (பூர்வீகம் செம்பூதி) மகன்வழிப் பேத்தியும், திருவிடைமருதூர் N. மங்கைபாகன் செட்டியார்-நாகேஷ்வரி ஆச்சி-மகள் வழிப்பேத்தியும், **S. முருகேசன் - M. அன்புப் பிரியாள்** அவர்களின் புதல்வி **M. வைஷ்ணவி B.Sc.** யின் பூப்புனித நீராட்டு விழா 19-06-2022 ஞாயிற்றுக்கிழமை வலையபட்டி நாட்டுக்கோட்டை நகரத்தார் திருமண மண்டபத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. நிகழ்வில் உற்றார், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் அனைவரும் கலந்துகொண்டு புதல்வியை வாழ்த்தி சிறப்பித்தனர்.

**தகவல் : S. முருகேசன், பொன் – புதுப்பட்டி.**

வாழ்க வையகம்! உ வாழ்க வளமுடன்!!

**நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்**

மக்கள் நோயற்ற வாழ்வு வாழவும், நோய் வந்தால் விரைவாக குணம் பெற்று நலமுடன் வாழவும் வாழ்த்துகிறோம்.

**ஸ்ரீஅம்பாள் மெடிக்கல்ஸ்**

பஸ் ஸ்டாண்டு முன்புறம், பொன்னமராவதி - 622 407.

**லயன் மு. வையாபுரி ராஜ்குமார். செல் : 98426 50806**

**ஸ்ரீஅம்பாள் மெடிக்கல்ஸ்**

127, முருகன் காம்ப்ளக்ஸ், கோவைபுதூர், கோவை - 641 042.

**மு. கார்த்திக் D.Pharm., செல் : 98426 50506**

**நியூ ஸ்ரீஅம்பாள் மெடிக்கல்ஸ்**

அம்பேத்கார் சதுக்கம், அறிவொளி நகர், கோவை - 641 042.

அரசு ராமனாதன் MCA., செல் : 98422 44497

# முழுநிலா- பௌர்ணமியின் சிறப்பு



பௌர்ணமி அன்று சந்திரன் எந்த நட்சத்திரத்தில் இருக்கிறாரோ, அதன் அடிப்படையில் தான் அந்த மாதத்தின் பெயர் அமைந்திருக்கும். சித்திரை நட்சத்திரத்தன்று பௌர்ணமி வருவதால் சித்திரை மாதம் எனப்படுகிறது. இந்த பௌர்ணமியை சித்ரா பௌர்ணமி என அழைக்கிறோம். மற்ற மாதங்களில் வரும் பௌர்ணமியில் சந்திரனில் களங்கம் மெலிதாகக் காணப்படும். ஆனால் சித்திரா பௌர்ணமி அன்று நிலவு தன் முழு ஆற்றலையும் வெளிப்படுத்தும். கிரிவல வழிபாட்டிற்கு பௌர்ணமியை தேர்ந்தெடுக்கப்படுவதற்கு முக்கிய காரணமே தேக பலம், மன பலம் அதிகரிக்கும் என்பதால் தான் பௌர்ணமியில் கிரிவலம் செல்கிறோம். கிரிவலம் செல்வோம்! தெய்வபலம் பெற்று சிறப்போடு வாழ்வோம்!!

**-A. கார்த்திகா B.Sc., மதுரை (சிறுகுடி)**


உ

ஸ்ரீ வாத்தியார் ஐயா துணை ஸ்ரீ நாகம்மாள் துணை ஸ்ரீ சேவுகமூர்த்தி துணை

**உரிமை : S. நாகராஜ், R. சேகர்**






**ஸ்ரீ நாகா கூல்கேர் & டிராவல்ஸ்**

**Sri Naga Cool & Travels**

சிறுவர் பூங்கா அருகில், சிங்கம்புணரி - 630 502

**கார் வாடகைக்கு கிடைக்கும்**

**98940 71382, 78268 79248**



அனைத்து முன்னனி நிறுவனங்களின்
A/C, Fridge, Washing machine, water Heater,
சிறந்த முறையில் பழுது நீக்கித் தரப்படும்



# வாசகர் குரல்



**வாசகர் குரல் : 159-1**

நகரத்தார் குரல் மே 2022 இதழில் அட்டைப்படத்தில் வெளிவந்த வெள்ளி ரிஷப வாகன காட்சி நேரில் பார்ப்பது போல் மிகவும் சிறப்பான முறையில் அமைந்திருந்தது. தலைவர் திரு செ. ஆசை அலங்காரம் B.Sc., அவர்கள் எழுதியுள்ள ஆறாம் திருவிழா பற்றிய கட்டுரையும், புத்தாண்டு பற்றிய விளக்கமும் மிகவும் அருமை. பாராட்டுக்கள்.

மார்ச் 2022 நகரத்தார் குரலில் வெளிவந்த புலவர் திருமதி உஷா எம்.ஏ. அவர்கள் எழுதியிருந்த தாய்மொழியைப் போற்றுவோம் கட்டுரையின் கருத்துக்கள் மிகவும் அருமை. அவருக்கு பாராட்டுக்கள்.

நமது சமூகத்தினரால் **மனையற நல்வழி காட்டியவர்** என்ற பட்டத்தைப் பெற்ற கோவை PL.R. அவர்கள் இறைவனருளாலும், தன்னலம் கருதாத சேவையாலும் முழு முயற்சியாலும் இதுவரை இணைந்த திருமணத் தம்பதிகள் 404. திரு PL.R. அவர்களால் தான் இணைந்தோம் என்று பெருமையுடன் கூறிக் கொண்டிருக்கிறார்கள். மிகவும் உயர்ந்த பண்பாளர். பெண் வீட்டார், மாப்பிள்ளை வீட்டார்களிடம் மிகவும் திறமையான முறையில் பேசி இணைத்து வைத்து கொண்டிருக்கும் பெருமை உடையவர். இந்த மண்ணில் பிறந்ததற்கு நல்லதொரு சேவையை தொடர்ந்து செய்து வருகிறார். நகரத்தார் பெருமக்கள் அனைவரும் நம்மிடம் உள்ள பெண், மாப்பிள்ளை தகவல்களை அவருக்கு தெரிவித்து திருமணங்களை நிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டுகிறோம். அவரும் அவருடைய குடும்பத்தார்களும் நலமுடன் நீடுழி வாழ இறைவனை வேண்டுகின்றேன். அவருடைய அலைபேசி எண் : 99523 49855.

**- V. கணேசன் B.Sc., தலைவர், அ.வ.ந. சங்கம், V. புதூர்**



பொன்னமராவதியில்
முதன் முறையாக
கோயில் பாரம்பரிய ஸ்தாபனம்
திருமண அழைப்பிதழுக்கான EXCLUSIVE ஷோரூம்
அருளரசு A/C
கார்ட்ஸ்
அன்பு ! ஆனந்தம் !! அருளரசு !!!
ONLINE PURCHASE WITH SPL DISCOUNT FOR OUR AVN GROUP
WEDDING CARDS
RECEPTION CARDS
MULTICOLOR CARDS
SCREEN / FOIL CARDS
விதவிதமான தாம்பூலப் பைகள்
ALL OCCASIONS INVITATION CARDS
COMPLIMENTARY ITEMS
CUSTOMISED CARDS
9865119115
9842119115
நாட்டுக்கல் மெயின் ரோடு, பொன்னமராவதி.

# 1 முதலாம் ஆண்டு
# நினைவு அஞ்சலி



தோற்றம்
17-09-1998

மறைவு
03-07-2021

## T. ஹரிகுமார்

இளம் வயதில் எங்களை விட்டுப் பிரிந்தாலும்
எங்கள் இதயத்தை விட்டு என்றும் பிரியாத
உன் நினைவோடு என்றும் வாழும்

தந்தை: **மா. திருஞானம்** தாய்: **தி. மாலதி**

**மா. திருஞானம்**
**ஞானம் கயிறு வியாபாரம்**
நாட்டுக்கல்,
பொன்னமராவதி

# தகவல் அறியும் உரிமைச் சட்டம்

தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005-ம் ஆண்டு இயற்றப்பட்டது. இச்சட்டத்தைச் சரியாக பயன்படுத்துவதன் மூலம் லஞ்சம் மற்றும் ஊழலை பெருமளவு கட்டுப்படுத்த முடியும்.

**சட்டம் எதற்கு**

அரசு அலுவலகங்கள் பொது மக்களுக்கு தகவல் சொல்லக் கடமைப்பட்டிருந்தாலும், இச்சட்டம் இயற்றப்படுவதற்கு முன் நீங்கள் கேட்கும் தகவலை அவ்வளவு எளிதில் பெற இயலாது. நீங்கள் தகவல் கேட்டு அனுப்பும் கடிதம் குப்பைக்குக் கூட செல்லும் வாய்ப்பு உள்ளது. ஆனால் இச்சட்டம் இயற்றப்பட்ட பிறகு தகவல் தர மறுத்தால், சட்டத்தை மீறுவதாகும். தண்டனை கிடைக்கும் என்ற அச்சத்தால் தகவல் கிடைக்கும் வாய்ப்பு உறுதியாகிறது.

**எங்கிருந்து தகவல் பெறலாம்?**

மத்திய மாநில அரசு நிறுவனங்கள், பொதுத்துறை நிறுவனங்கள், அரசு நிதி பெறும் நிறுவனங்கள் ஆகியவற்றிலிருந்து தகவல் பெறலாம். தனியார் நிறுவனங்களுக்கு இச்சட்டம் பொருந்தாது.

**என்ன தகவல் பெறலாம்..?**

அரசு அலுவலகங்களில் உள்ள கோப்புகள், ஆவணங்கள், சுற்றறிக்கைகள், ஆணைகள், ஈமெயில்கள், நோட் பயில் எனப்படும் அலுவலகக் குறிப்புகள் ஆகியவை பெறலாம். இது தவிர சாலை போடுதல், அரசு கட்டுமானப் பணிகள் நடைபெறும் இடங்களில் மாதிரிகள் கேட்டுப் பெறலாம்.

**எவ்வாறு பெறுவது?**

ஒரு தகவல் பெறுவதற்கென தனியான படிவம் ஏதும் கிடையாது. ஒரு சாதாரண வெள்ளைத் தாளில் வேண்டிய தகவல்களை கேட்டு விண்ணப்பிக்கலாம்.

**கட்டண விவரம்**

மத்திய அரசும், தமிழ்நாடு அரசும் தகவல் பெற ரூ.10 /- என கட்டணம் நிர்ணயித்துள்ளன. இக்கட்டணத்தை ரொக்கமாகவோ, வரைவோலையாகவோ, நீதிமன்ற கட்டண வில்லை மூலமாகவோ செலுத்தலாம். நகல் பெறுகையில் ஒரு தாளுக்கு ரூ.2 எனக் கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**யாரிடம் தகவல் கேட்பது..?**

ஒவ்வொரு அரசு அலுவலகத்திலும் உதவிப் பொதுத் தகவல் அலுவலர் அல்லது பொதுத் தகவல் அலுவலர் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். இப்பொதுத் தகவல் அலுவலர்களின் மத்திய அரசுக்கான பட்டியல் www.tn.gov.in என்ற தளத்தில் உள்ளன.

**தகவல் ஏன் கேட்கிறோம் என சொல்ல வேண்டுமா?**

பிரிவு 6(2)-ன்படி தகவல் கேட்பவர் எதற்காகத் தகவல் கேட்கப்படுகிறது என்ற விபரத்தை தெரிவிக்க வேண்டியதில்லை. பதில் அனுப்ப ஒரு தொடர் முகவரியைத் தவிர வேறு எந்த விபரத்தையும் அளிக்க வேண்டிய அவசியம் இல்லை.

**எவ்வளவு நாட்களில் தகவல் பெறலாம்?**

பிரிவு 7(1)-ன்படி ஒரு பொதுத் தகவல் அலுவலர் 30 நாட்களில் தகவல் தர வேண்டும். கேட்கப்படும் தகவல் ஒரு நபரின் உயிர்ப்பாதுகாப்பு பற்றிய செய்தியாக இருந்தால் 48 மணிநேரத்தில் தர வேண்டும்.

**மேல் முறையீடு**

பொதுத் தகவல் அலுவலர் 30 நாட்களில் தகவல் தரவில்லையென்றாலோ அல்லது அவர் அளித்த தகவல் திருப்திகரமாக இல்லையென்றாலோ அந்தந்த துறைகளில் பிரிவு 19-ன் கீழ் உள்ள மேல் முறையீட்டு அதிகாரியிடம் 30 நாட்களுக்குக்குள் முதல் முறையீடு செய்யலாம்.

மேல்முறையீட்டு அதிகாரியின் பதில் திருப்திகரமாக இல்லையெனில் 90 நாட்களுக்குள் பிரிவு 19(3)-ன் கீழ் மாநில தகவல் ஆணையரிடம் இரண்டாவது மேல்முறையீடு செய்யலாம்.

தமிழ்நாடு மாநில் தகவல் ஆணையம்
273/378 அண்ணாசாலை,(வானவில் அருகில்)
தேனாம்பேட்டை, சென்னை-600 018
போன்: 0442 24357580

**தகவல் தராவிட்டால் தண்டனை உண்டா?**

பிரிவு 20-ன் கீழ் குறிப்பிட்ட காலத்துக்குள், உரிய நியாயமான காரணங்களால் எதுவுமின்றி தகவல் தர மறுத்தாலோ, தவறான தகவல் அளித்தாலோ தகவல்களை அழித்தாலோ பிரிவு 20-ன் கீழ் அதிகபட்சமாக ரூ.25,000/- அபராதம் மற்றும் துறை நடவடிக்கை எடுக்க தகவல் ஆணையத்துக்கு அதிகாரம் உண்டு.

**விதி விலக்குகள்**

பிரிவு 8-ன்படி நாட்டின் இறையாண்மைக்கு ஊறு விளைவிக்கும், நீதிமன்றத்தால் தடை செய்யப்பட்டிருக்கும், சட்டமன்ற, பாராளுமன்ற உரிமைகள் மீதும், வியாபார ரகசியங்கள், வெளிநாடுகளிலிருந்து அரசுக்கு வந்த ரகசியங்கள், காவல் துறையின் ரகசிய தகவல்களுக்கு ஆபத்து ஏற்படுத்தும் தகவல்கள், புலனாய்வில் உள்ள வழக்குகள், அமைச்சரவை கூட்ட குறிப்புகள் போன்றவை இச்சட்டத்திலிருந்து விலக்கு அளிக்கபட்டுள்ளது. மேலும் பிரிவு 24-ன் கீழ் மத்திய மற்றும் மாநில அரசுகளால் பட்டியலிடப்படும் பாதுகாப்பு மற்றும் உளவுத்துறை நிறுவனங்கள் ஆகியன இச்சட்டத்திலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளன.

**எவ்வாறு இச்சட்டத்தை உபயோகமாய் பயன்படுத்தலாம்?**

இச்சட்டத்தை பயன்படுத்தி சட்டமன்ற உறுப்பினர் மற்றும் பாராளுமன்ற ஊறுப்பினர்களின் தொகுதி மேம்பாடு நிதி எவ்வாறு செலவிடப்படுகிறது எனக் கேட்கலாம். ஊழல் நடைபெறக்கூடும் என்று சந்தேகப்படும் அலுவலகங்களில் தகவல் கேட்கலாம். உங்கள் தெருக்களில் போடப்படும் சாலைகளிலோ, அரசு கட்டுமானப் பணிகளிலோ மாதிரிகள் எடுத்து சோதனைக் கூடங்களுக்கு அனுப்பலாம். டெண்டர் விவரங்களைக் கேட்கலாம்.





**தகவல் கேட்பவரை மிரட்டினால் என்ன செய்வது...?**

தகவல் கேட்பவரை மிரட்டுவது சில நேரங்களில் நிகழ்ந்துள்ளது. குறிப்பாக காவல் துறையினரிடம் தகவல் கேட்கையில் இது போல் நிகழும் வாய்ப்பு உள்ளது. அவ்வாறு நேர்ந்தால் எந்தத் தகவலை கேட்கையில் மிரட்டல் வந்ததோ அதே தகவலை மாநிலத்தில் பல்வேறு இடங்களில் இருந்து நண்பர்களையோ, உறவினர்களையோ அதே தகவலை கேட்டு பல விண்ணப்பங்களை அனுப்பச் செய்யுங்கள். இது மிரட்டலை நிச்சயம் நிறுத்தும். இதையும் மீறி மிரட்டல் தொடர்ந்தால் வழக்கறிஞர்களை அணுகலாம்.

**- G. மைனர் வெள்ளைச்சாமி, B.L., சிறுகுடி.**

---

## பூப்புனித நன்னீராட்டு விழா

மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், சொக்கம்பட்டி கழுகக்கூருடையார் திரு R. மகாலிங்கம் செட்டியார் – இளமதி ஆச்சி இவர்களின் மகன் வழிப் பேத்தியும், திண்டுக்கல் மாவட்டம், நத்தம் வட்டம், சிறுகுடி பொன்னமராவதி பூண்டிலூருடையார் திரு T. நாகராஜன் செட்டியார் – ரோஜா ஆச்சி இவர்களின் மகள் வழிப் பேத்தியும் சொக்கம்பட்டி திரு M. நாகராஜ குமார் செட்டியார் – தங்கமணி ஆச்சி இவர்களின் குமாரத்தி N. சிவஸ்ரீ – என்பவருக்கு பூப்புனித நன்னீராட்டு விழா சொக்கம்பட்டி மங்கைபாகர் தேனம்மை திருமண மண்டபத்தில் 23.06.2022 அன்று வியாழக்கிழமை சிறப்பாக நடைபெற்றது. விழாவில் உற்றார் உறவினர்கள் கலந்து கொண்டு N. சிவஸ்ரீயை ஆசீர்வதித்தனர்.

**தகவல் : திரு ஆனந்த் துரைராஜ், அம்மன்குறிச்சி.**

---

## பௌர்ணமி வழிபாடு – கிரிவலம்

விழா என்ற சொல்லுக்கு விழித்திருப்பது என்பது பொருளாகும். தெய்வங்களை வழிபடுதல், சாமிகள் நகர் வலம் போன்ற வழிபாட்டு நிகழ்வுகள் இரவில் தான் நடத்துவார்கள். பகலில் சூரியனின் தாக்கம் அதிகமாக இருப்பதால் திருவிழாவிற்கு இரவைத் தேர்ந்தெடுத்தார்கள் நம் முன்னோர்கள். பௌர்ணமி அன்று வெளிச்சத்திற்கு குறைவு இருக்காது. சூரியனும் சந்திரனும் நேருக்கு நேர் சந்திக்கும் இந்த நாட்களில் இரவில் இறை வழிபாட்டால் கிரிவலம் மேற்கொண்டால் உடல்நலம், மனவலிமை அதிகரிக்கும் என்பது ஐதீகம், இது மருத்துவ ரீதியாகும் ஒப்புக் கொள்ளபட்ட உண்மையாகும்.

**– I. சாமிஆஸ், கோவை.**

# குக்கர் பராமரிப்பு முறைகள்



பிரஷர் குக்கர் பானில் அரிசி, பருப்பு, காய்கனிகள் வைக்கும்போது மூடியின் மேல் பாகத்தைத் தொடும்படி வைக்கக் கூடாது. வைத்தால் மூடியின் நடுவில் உள்ள துளையில் அடைத்துக் கொண்டு, வெயிட் வால்வு சரியான முறையில் நீராவியை வெளியேற்ற இயலாது போய்விடும்.

குக்கரை அடுப்பில் வைத்துவிட்டு, வெளியில் எங்கும் போகக் கூடாது. வீட்டிலேயே வேறு வேலை செய்து கொண்டிருக்கலாம்.

இரண்டு, மூன்று குக்கர்கள் இருந்தால், அவை ஒரே கம்பெனியாக இருந்தால் கூட ஒன்றின் மூடியை இன்னொன்றுக்கு பயன்படுத்தக் கூடாது.

குக்கரின் மரப்பிடிகள் பழுதடையாமல் இருக்க அடிக்கடி பிடிகளில் உள்ள ஸ்குரு ஆணிகளைத் தளர்த்தி, சில துளிகள் தேங்காய் எண்ணெய் விட்டு முடுக்கலாம். அவ்வப்போது நன்கு துடைக்க வேண்டும்.

குக்கரில் பொருந்தும் ரப்பர் வளையத்தை (காஸ்கட்) தனியே எடுத்துக் கழுவி ஆணியில் மாட்ட வேண்டும். ஆண்டுக்கு ஒருமுறையேனும் இதை மாற்ற வேண்டும்.

குக்கரைப் பயன்படுத்தும்போது, குழாயின் மீது வெயிட் வைத்த பின்பு கைப்பிடியைத் திருப்பக் கூடாது. வெயிட் வால்வைக்கீழே போடக்கூடாது.

குக்கரின் அடிப்பகுதியில் ஏற்படும் கரியைப் போக்க, அதைக் கவிழ்த்துப் போட்டு தேய்க்கக் கூடாது. அப்படிச் செய்தால் மேல்பகுதி தரையில் உராயும். குக்கர் பழுதாகிவிடும்.

குக்கர் சுத்தமாகவும், பளபளப்பாகவும் இருக்க மென்மையான தரமான பவுடர் பயன்படுத்த வேண்டும். குக்கரின் உள்பாகம் நிறம் மாறிவிட்டால், பயன்படுத்தும்போது

எலுமிச்சம் பழத் தோலையோ, சிறிது புளியையோ போட்டு வைத்தால் பளிச்சென்று இருக்கும்.

உள்ளே அலுமினிய, எவர்சில்வர் பாத்திரங்கள் வைக்கும் முன்பு உள்ளிருக்கும் நீர் கொதித்து ஆவி வரும்போது கிடுக்கியால் ஒவ்வொன்றாக எடுத்து வைக்க வேண்டும்.

துளைகளுடன் தட்டை கவிழ்த்துப்போடாமல் தட்டின் விளிம்பு மேலே இருக்குமாறு, குக்கரில் வைக்க வேண்டும். குக்கரை தரையில் வைத்து இழுப்பதோ, சொரசொரப்பான பொருட்களால் தேய்ப்பதோ தவறு.

குக்கரை எண்ணெய்விட்டு வதக்குவதற்கோ, கிளறுவதற்கோ வேறு எதற்கும் பயன்படுத்தக் கூடாது.

பிரஷர் குக்கரை அடுப்பில் வைத்து மூடுவதற்கு முன் காஸ்கட்டில் உணவுத் துகள்கள் போல ஏதாவது ஒட்டிக் கொண்டுள்ளதா எனப் பார்க்க வேண்டும். இருந்தால் பிரஷர் வெளியேறிவிடும்.

**-G. தென்னரசி D.Pharm., ரத்தினபுரி, கோவை**

---


உ

சிவமயம்

வானிற்பொலி வெய்தும்மழை மேகங்கிழித் தோடிக்
கூனற்பிறை சேருங்குளிர் சாரற்கொடுங் குன்றம்
ஆனிற்பொலி வைந்துமமர்ந் தாடியுல கேத்தத்
தேனிற்பொலி மொழியாளொடு மேயான்திரு நகரே

திருஞான சம்பந்தர் அருளிய
திருக்கொடுங்குன்ற பதிகம்

குரல் சிறக்க வாழ்த்துக்கள்

**அன்புமணி மெடிக்கல்**

**சின்னக்கடை வீதி, 260, அண்ணாசாலை,**

**பொன்.புதுப்பட்டி, பொன்னமராவதி.**

**போன் : 04333 260285, செல் : 94423 58165**

# அஜினோமோட்டோ



அஜினோமோட்டோ என்னும் ஒரு சுவை கூட்டும் உப்பு... பொதுவாக எல்லா சீன வகை உணவுகளிலும் சுவையைக்கூட்ட சேர்க்கப்படும் இந்த அஜினோமோட்டோ பற்றி நாம் என்ன அறிந்து வைத்திருக்கிறோம் என்றால்.. அது லைட்டாக தூவி விட்டால் டேஸ்ட் இல்லாத உணவு கூட ருசிக்கும். ஆனால் அதிகமாக யூஸ் பண்ணினால் முடி கொட்டும் அவ்வளவுதான் என்று.. ஆனால் உண்மையில் இதன் வரலாற்றை அறிந்தால்?

அஜினோமோட்டோ என்பது நாம் நினைப்பதுபோல அது ஒரு கடல் உப்பின் பெயரல்ல...அது ஒரு கம்பெனியின் பெயர். ஜப்பானில் 1917-ம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்த நிறுவனத்தின் பெயரே அதன் பொருளுக்கும் ஒட்டிக் கொண்டது. உண்மையில் இந்த உப்பின் பெயர் Monosodium glutamate (MSG) என்பதாகும். இதனை மருத்துவ உலகில் slow killer என்கிறார்கள். ஜப்பான் தலைநகர் டோக்கியோ, சிவோ வை தலைமையிடமாகக் கொண்டு கிகுனே இகெடா என்பவரால் 1917-ல் இந்த அஜினோமோட்டோ தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டது.

கடல் படுகைகளில் வளரும் ஒரு பூஞ்சை மற்றும் பாசி செடி (Seaweed) வகைகளில் இருந்து எடுக்கப்பட்ட ஒரு வகை உப்பு தான் monosodium ஆகும். முதலில் கிகுனே இகெடா 1909-ல் அவர் தனது வீட்டில் நடத்தி வந்த வைத்தியசாலையில் அதனை மருந்தாக பயன்படுத்தி வந்தார். பிறகு உணவுகளில் சேர்த்து அதில் ருசி கூட்டப்பட்டிருந்ததை அறிந்து பிறகு அதனை உபயோகித்து Seasoning, cooking oil,sweetener, amino acids, வரை தயாரித்து பின் Pharmaceutical துறையிலும் இந்த உப்பை அறிமுகம் செய்தார்.

முதலில் அது தயாரிக்கப்பட்ட விதம் என்னவோ உயர் தரமானதாக இருந்தது. ஆனால் 1917-ல் அமெரிக்க நிறுவனத்தோடு கைகோர்த்து வியாபார நோக்கில் ஆரமபிக்கப்பட்ட தொழிற்சாலையில் Glutamate என்னும் செயற்கை அமிலத்தையும் அந்த monosodium உப்போடு கலந்து விட்டு வியாபாரத்தை அதிகப்படுத்தினர்.

Glutamate என்பது ஒரு அடிமைப்படுத்தும் காரீயமாகும். ஒரு முறை உண்டால் மீண்டும் மீண்டும் சுவைக்க தூண்டும் போதை பொருள் போன்றதொரு சுவையூக்கி ஆகும். முதலில் இந்த Glutamate ஐ உபயோகித்து Artificial Sweetener என்னும் Aspartame ஐ தயாரித்து வந்தனர். பிறகு இதன் அபாயமறிந்து அமெரிக்காவில் தடை செய்துவிட்டனர். ஆனால் அதன் மறுஉருபமே இந்த அஜினோமோட்டோ உப்பாகும். இன்றைய அவசர உலக சமையல் குறிப்புகளில் தவறாமல் இடம் பெறும் இந்த அஜினோமோட்டோ உப்பை பயன்படுத்தாத நாடுகளே இல்லை எனலாம். சாலையோர கடைகள் தொடங்கி மல்டிகுஷன் ரெஸ்ட்டாரன்ட் வரை சென்னை முதல் நியூயார்க் வரை என எல்லா உணவகங்களிலும் இதனை ருசிகூட்ட பயன்படுத்தாதவர்கள் இல்லை. முன்பெல்லாம் சைனீஸ் வகை உணவுகளில் தான் அஜினோமோட்டோ தூவப்படும் என்ற மாயை போய் தமிழகத்து ரசம் வரை இதை தூவ ஆரம்பித்து விட்டார்கள்.

சரி. இதை நாம் வாங்கி பயன்படுத்த வேண்டாம் என நினைத்து புறக்கணித்தாலும் நாம் உபயோகிக்கும் அத்தனை வகையான பதப்படுத்தப்பட்ட உணவு பொருள்களிலும் இது மறைமுகமாக கலக்கப்பட்டுள்ளது. குறிப்பாக குழந்தைகள் அவர்கள் உண்ணும் பாக்கட் சிப்ஸ், க்ரீம் பிஸ்கட், சாதரண பிஸ்கட், நூடுல்ஸ், இன்ஸ்டன்ட் சூப், மசாலா ஐட்டங்கள், ரெடிமேடு சப்பாத்தி, பராட்டா, சமோசா, பப்ஸ், சாஸ்வகைகள், சோயா பொருட்கள், சாக்லேட்கள் மற்றும் சில குளிர்பானங்கள் என எல்லாவற்றிலும் அஜினோமோட்டோ என்னும் MSG slow killer உண்டு. அதனால்தான் இந்த Lays, Kurkure

வகையறாக்களை உண்ணும் நம் வாண்டுகள் அதற்கு அடிமையாகிறார்கள். அஜினோமோட்டோ கலந்த உணவுகளை சுவைப்பதால் ஏற்படும் பின் விளைவுகள்:

1. ஆணோ, பெண்ணோ இரு பாலருக்கும் முடி கொட்டுவது உறுதி.
2. இரத்தத்தில் இன்சுலின் அளவை அதிகப்படுத்துவதால் அதிகமான பசி எடுக்கிறது. நாம் உணவை அடிக்கடி உண்ண உண்ண ஊளைச் சதை போடுகிறது. பிறகு அதை குறைப்பது மிக கடினம்.. உடல் எடை கூடினால் தானாக சுகரும், இதய நோயும் இலவசமாக வரும்.
3. குழந்தைகள் மற்றும் கர்ப்பிணிகளுக்கு இந்த அஜினோமோட்டோ கொடிய விஷமாகும். ஐந்து வயது குழந்தைக்கும் தீராத தலைவலியை உருவாக்கும் தன்மை கொண்டது.
4. நரம்பு மண்டலத்தில் அதிக உற்சாகத்தை உருவாக்கி பிறகு பயங்கரமான பலஹீனத்தை உண்டாக்கி விடும். இதனை மருத்துவர்கள் Over Stimulation of Nerves System என்கிறார்கள்.
5. இருதய நோய்களாக அதிபயங்கர துடிப்பும் சில நேரம் வலியும் உருவாக்கும்.
6. முகத்தில் எந்நேரமும் ஒரு எரிச்சல் இருப்பது போலவே சிலர் உணருவார்கள். அரிப்பும் தோன்றும் சிலரது முகம் கருத்திருக்கும்.
7. வழக்கமாக இரத்தக் கொதிப்பு, தைராய்டு, நீரிழிவு, ஆஸ்துமா, உணவு ஒவ்வாமை, அதீத வியர்வை சுரப்பினால் உண்டாகும் Dehydration என்னும் நீர்ச்சத்து குறைதல், கண்களில் ரெட்டினா குறைபாடு எல்லாம் உருவாக அஜினோமோட்டோ காரணியாகிறது.
8. இவை எல்லாம் ஒரு நாள் நம்மை புற்றுநோயிடம் இழுத்துச் செல்லும். ஆகவே அஜினோமோட்டோவை தவிர்ப்போம். உடல் நலம் காப்போம்.

**-S. அபிராமி B.Com., தங்கம் மெடிக்கல், பீளமேடு, கோவை**

# தஞ்சை அ.வ.ந. சங்க 34-வது ஆண்டு விழா & பொதுக்குழுக் கூட்டம்

தஞ்சாவூர் அருவியூர் வடக்குவளவு நகரத்தார் சங்கம் 34-வது ஆண்டு விழாவும், பொதுக்குழுக் கூட்டமும் 26.6.2022 அன்று ஞாயிற்றுக்கிழமை தஞ்சாவூர் ராஜராஜ சமய சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

விழா தொடக்கத்தில் இ. வர்ஷினி, கு. இலக்கியா மற்றும் கு. சுப்ரியா ஆகியோர் தமிழ்த்தாய் வாழ்த்து பாடினார்கள். திரு சொ. இளங்கோவன் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். தலைவர் திரு P. சிவன்ஜோதி அவர்கள் தலைமை உரை ஆற்றினார். ஆண்டறிக்கையை திரு R. முருகப்பன் அவர்கள் வாசித்தார் வரவு செலவு அறிக்கையை திரு M. அறிவுக்கரசன் அவர்கள் தாக்கல் செய்தார். சிறப்பு அழைப்பாளர்களான அருவியூர் வடக்கு வளவு. பொதுநலச் சங்கத் தலைவர் M.S. முருகப்பன் அவர்களும், செயலாளர் திரு M. சாமிநாதன் அவர்களும், திரு S. மங்கைபாகன் பொருளாளர் அவர்களும், அ.வ.ந. கல்வி வளர்ச்சிக் கழகத் தலைவர் திரு செ. ஆசை அலங்காரம், திரு மு. இராமலிங்கம் செயலாளர் மற்றும் திரு S. முத்து, பொருளாளர் ஆகியோர்களும் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்கள்.

விழாவில் முன்னாள் சங்க நிர்வாகிகளையும் மற்றும் தஞ்சாவூர் சங்க கட்டடத்தின் கல்வெட்டில் இடம் பெற்றவர்களையும் பாராட்டி, பொன்னாடை அணிவித்து கௌரவிக்கப்பட்டார்கள். சிறுவர்களுக்கான விளையாட்டு போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன.

தஞ்சாவூர் அ.வ.ந. சங்கத்தின் 2022-2025 மூன்று ஆண்டுகளுக்கு தலைவராக திரு சொ. இளங்கோவன் அவர்களும், செயலாளராக திரு சி. சோலைராஜன் அவர்களும், பொருளாளராக திரு M. பாண்டியராஜன் அவர்களும், துணைத் தலைவர் பொறுப்பிற்கு திரு M. சதாசிவம் அவர்களும், துணைச் செயலாளராக திரு R. ராஜேந்திரன் அவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டு பதவி ஏற்றுக் கொண்டார்கள். விழாவில் கலந்து கொண்ட அனைவருக்கும் திரு M. பாண்டியராஜன் அவர்கள் நன்றி தெரிவித்து உரை ஆற்றினார். மதிய உணவுடன் விழா இனிதே நிறைவு பெற்றது.

**தகவல் : சொ. இளங்கோவன் D.Pharm. க.வ.க. நிர்வாகக் குழு**

## வேதியியலில் முனைவர் பட்டம் பெற்ற நம்மவர்



திருமதி **Dr. இளவரசி ஆச்சி,** க/பெ திரு S. சிதம்பரம் செட்டியார், சிவகாசி அவர்கள் 1998-ம் ஆண்டிலேயே வேதியியலில் கேன்சருக்கான மருந்துகள் வேலை செய்யும் முறையை தெரிவதற்குப் பயன்படும் நியூக்ளிக் அமிலக்கூறுகளுடன் கூடிய தாமிரம், பலேடியம், பிளாட்டினம் மற்றும் ரோடியம் ஆகியவற்றின் சேர்மங்களை ஆய்வு செய்து சென்னை இன்டியன் இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜியில் (IITM) தனது ஆராய்ச்சிக் கட்டுரையைச் சமர்ப்பித்து முனைவர் (Doctor of Philosophy) பட்டம் பெற்றுள்ளார். **தகவல் : திருமதி Dr. இளவரசி ஆச்சி, சிவகாசி.**

சென்னை இன்டியன் இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜியில் வேதியியலில் முனைவர் பட்டம் பெற்ற திருமதி Dr. இளவரசி ஆச்சி, க/பெ திரு S. சிதம்பரம் செட்டியார், சிவகாசி அவர்களை வாழ்த்துவதில் பெருமிதம் கொள்கிறது.

**– செ. ஆசை அலங்காரம், தலைவர், கல்வி வளர்ச்சிக் கழகம்.**

---

உ
ஸ்ரீ பொன்னழகி அம்மன் துணை

சினேகா பியூட்டி பார்லர்



மணப்பெண் அலங்காரம் தேவையான நகைகள் அணிவித்து சிறந்த முறையில் செய்து தரப்படும்.
நகை செட் வாடகைக்கு விடப்படும்



48/B, கணபதி நகர்,
பிள்ளையார் தெரு
அரியமங்களம்,
திருச்சி - 620 010
Cell :99942 89723 & 63859 18499

# உலகளாவிய அறிவியலும் ஆன்மீகமும் கலந்த இந்து தர்மம் (அறிந்ததும் அறியாததும்)

**இந்து தர்மம் உருவான விதம்:**



ஆதி சிவன் மூலம் அனுப்பப்பட்ட ஏழு ரிஷிகளால் உலகம் முழுதும் இந்து தர்மம் உண்டானது. இது பல லட்சம் ஆண்டுகளுக்கு முன் நடந்தது. இந்திய திருநாட்டை ஞான பூமி, புண்ணிய பூமி என அழைக்கக் காரணம் உலகின் தலைசிறந்த பண்பாடு, கலை, கலாச்சாரம் இவைகளை பெற்றதால்தான். இந்தியப் பண்பாடு மறுமலர்ச்சி பெற செய்தவர்களில் முக்கியமானவர்கள் ஆதி சங்கரர், ராமனுஜர், புத்தர், காந்தி வீரத்துறவி விவேகானந்தர் ஆவர். அன்பு, அஹிம்சை, சத்தியம், நேர்மை போன்ற உன்னத கருத்துக்களை போதித்தார்கள். இன்று உலகம் இந்திய நாட்டின் பண்பாட்டை கலாச்சாரத்தை பழக்க வழக்கங்களை நோக்கி பயணிக்க தொடங்கி விட்டது.

அமெரிக்கா அனைத்து வளங்களோடு இருந்த 18-ஆம் நூற்றாண்டில் சிகாகோ சிட்டி புகழ் பெற்ற நகரமாக இருந்தது. அமெரிக்க மக்கள் கிறிஸ்தவ மதமே சிறந்தது என நினைத்து, உலக மதங்களின் மாநாடு ஒன்றை நடத்த முடிவு செய்தனர். 11.09.1893 இந்த நாளில் உலக நாட்டு மதத் தலைவர்களை வரவழைத்து சிறப்புரை ஆற்றச் செய்து அதன் மூலம் உலகின் தலை சிறந்த மதத்தை தேர்வு செய்ய முடிவு செய்யப்பட்டது.

சிகாகோவில் 11.09.1893 அன்று ஏறத்தாழ 7000 மக்கள் கூடியிருந்த மண்டபத்தில் பல நாட்டு மதத் தலைவர்கள் வந்து சிறப்புரை ஆற்ற தயாராக இருந்தனர். இந்திய திருநாட்டின் மதப் பிரதிநிதியாக வீரத்துறவி விவேகானந்தர் கலந்து கொண்டார். தனக்குரிய பேச்சை சிறப்புரையாக பேச அழைத்ததை அடுத்து விவேகானந்தர் பேசத் தொடங்கிய முதல் பேச்சு இது. அமெரிக்க நாட்டிலே உலக மதத் தலைவர்கள் கூடி இருந்த சபையில் எனது அருமை சகோதர சகோதரிகளே!! என அன்பு கலந்த உரையை பேசத் தொடங்கியவுடனே அனைவரும்

கரவொலி எழுப்பி தங்களது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். பேச்சின் துவக்கத்தில் லேடிஸ் அன்ட் ஜென்டில்மேன் என கேட்டுப் பழகிய அமெரிக்க மக்கள் வீரத்துறவி விவேகானந்தரின் உலகளாவிய அன்பு உரையில் மிகவும் மகிழ்ச்சி அடைந்தனர். இந்திய வேதாந்தம் பற்றிய அற்புதமான, எளிய விளக்கவுரை நிகழ்த்திய விவேகானந்தர் அன்றைய தின உரையின் மூலம் உலகத்திற்கு ஞான ஒளியை பரப்பினார் என்பதே உண்மையாகும். இந்த மாநாட்டில் உலகிலேயே சிறந்த மதமாக இந்து மதம் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அமெரிக்க மக்கள் கிறிஸ்தவ மதமே சிறந்தது என முடிவு செய்த நேரத்தில் இந்திய வேதாந்தம் உலகின் தலைசிறந்த மதமாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

""Man Proposes God Disposes'' மனிதன் ஒன்று நினைக்க தெய்வம் வேறு ஒன்று நினைக்கும் என்பது இது தான்.

**–அ.ச. அலங்கார குமரன், திருப்பூர்**

உ
சிவமயம்
அருவியூர் வடக்குவளவு நகரத்தார் குரல் சிறக்க வாழ்த்துக்கள்!

உஷா ஜுவல்லர்ஸ் பைனான்ஸ் டெக்ஸ்

77-78, மீனாட்சி டவர்ஸ், P.T.ராஜன் ரோடு,
பீபீ குளம், மதுரை-2.

:7373073738

# வேந்தன்பட்டி
# நெய் நந்தி விருத்தம்



- முனைவர் அங்கப்பன்

**காப்பு :**

ஒருகோ டிருசெவி மூன்றுகண் நால்வாய்க்
கருவயிறன் காத்தல் கடன்

**பயன் :**

1. எல்லா நலமும் இனிதே பெறுவதுடன்
பொல்லா வினையகலப் பூரிப்பர் - நல்லார்வாழ்
பாங்கான வேந்தப் பதிநந்திப் பாஓதின்
தீங்கின்றி வாழ்வார் சிறந்து.

2.நெய்க்கடலில் நீந்துகின்ற நீள்நந்தி தாள்தொழுதால்
வையகத்தே நல்வாய்ப்பு வந்திடுங்காண்-பொய்யில்லை
அல்லல் கடல்நீந்தி ஆனந்தம் கண்டிடலாம்
இல்லையே தொல்லை இனி.

## நந்தி விருத்தகம்

1. பல்வளமும் சூழுகின்ற பறம்புமலை நாடு
பாரிபுகழ் முல்லைமணம் பரவுகின்ற நாடு
இல்வளமும் சொல்நலமும் இலங்குதிரு நாடு
ஏர்வளமும், போர்மறமும் இனிதிலங்கு நாடு
வல்லவராய் வாழ்வோர்கள் வாய்ப்புகளைக் காண
வையத்தார் எல்லோரும் பெற்றோரைப் பேண
நல்லவர்கள் வாழுகின்ற வேந்த நகர்க்கோனே!
நல்லவழி விட வேண்டும் நந்திபெரு மானே!

2. பெற்றவர்கள் பிள்ளைகளைப் பேணமறந்தாலும்
பிள்ளைகளும் பெற்றோர்தாள் பூண மறந்தாலும்
கற்றவர்கள் அறநெறியை மதிக்க மறந்தாலும்
காரிகையர் கணவனையே துதிக்க மறந்தாலும்
கொற்றவர்கள் நல்லாட்சி நடத்த மறந்தாலும்
குடிமக்கள் அறவழியில் நடக்க மறந்தாலும்
நற்றவர்கள் வாழுகின்ற வேந்த நகர்க் கோனே!
நல்லவழி விட வேண்டும் நந்திபெரு மானே!

3. கற்புடைய மங்கையர்கள் உலவுதிரு நாடு
கபிலரெனும் தெய்வீகப் புலவரது நாடு
அற்புடைய குடிகளொடு அறம் வளரும் நாடு
அறிஞர்களும் கலைஞர்களும் அவதரிக்கும் நாடு
பற்பலவாய்க் கோவில், கலை, பக்திவளர் நாடு
பாரனைத்தும் வந்தாலும் விருந்தோம்பும் நாடு
நற்கொடைஞர் வாழுகின்ற வேந்த நகர்க் கோனே!
நல்லவழி விட வேண்டும் நந்திபெரு மானே!

4. படமுடியா தினித் துயரம் படமுடியா தரசே!
பட்டதெல்லாம் போதுமென அறைகின்றேன் முரசே!
உடலெல்லாம் அடிபட்டு முறிந்தாலும் நீயே
உற்றதுணை எனக்கில்லை துதிக்கின்றேன் தாயே
விடமாட்டேன் நினதடியை அன்றுமுதல் நானே!
வேண்டுவன நீயறிவாய் ஈக அருள்தானே!
நடமாட்டேன் உனையன்றி வேந்த நகர்க் கோனே!
நல்லவழி விட வேண்டும் நந்திபெரு மானே!

5. பாட்டரசன் நானாக மாறிடவும் இல்லை
பாரெல்லாம் எனது புகழ் பரவிடவும் இல்லை
ஆட்டரசன் ஊர்ந்து வரும் பேறு பெற்ற ஞானி
அன்பர்களைக் கரையேற்றும் நெய்க்கடலின் தோணி
வீட்டரச னாகஇங்கே இருந்துவிட லாமோ
வேலை செய்ய விழைவோரைத் தேம்பவிடலாமோ
நாட்டரசர் வாழுகின்ற வேந்த நகர்க் கோனே!
நல்லவழி விட வேண்டும் நந்திபெரு மானே!

6. முன்னைவினை யாவையென முழுதுமறிந்திலனே!
மூளும்வினை யாவையென முற்றுமுணர்ந்திலனே!
பின்னைவினை யாதுசெய்யும் பேதையறி யேனே!
பேரறிவும் மூதறிவும் கற்றுமுணரேனே!
என்னையினும் என்செய்ய எண்ணியுளாய் நீதான்
இமைப்பொழுதும் உன்னடியை மறந்தறியேன் நான்தான்
நன்மைஎலாம் விளங்குகிற வேந்த நகர்க் கோனே!
நல்லவழி விட வேண்டும் நந்திபெரு மானே!





7. பூவலரும் தேனொழுகும் சோலைகளும் சூழும்
பூந்துணரில் தேன்வண்டு பகலிரவாய் வாழும்
பாவலர்கள் வள்ளல்களைப் பாடிமகிழ் வார்கள்
பாரிவழி வந்தவர்கள் ஈந்துகளிப் பார்கள்
ஏவலர்கள் குறிப்பறிந்து கடமைகளைச் செய்வர்
இரவலரும் புரவலரும் குறள்வழியில் செல்வர்
நாவலர்கள் வாழுகின்ற வேந்த நகர்க் கோனே
நல்லவழி விட வேண்டும் நந்திபெரு மானே

8. நீதி நெறி எந்நாளும் நிலவு வேந்தன் பட்டி
நெய்மணக்கும் வீடெல்லாம் பண்பாட்டின் தொட்டி
பாதிவழி வந்திடையில் கைவிடுவார் இல்லை
பாண்டியனார் பறம்பினைப் போல் பாரில்மலை இல்லை
ஆதிமுதல் வாணிபத்தில் எந்நாடும் செல்வர்
அனைவரையும் உறவாக்கி அன்பாலே வெல்வர்
நாதியிலார் இல்லாத வேந்த நகர்க் கோனே!
நல்லவழி விட வேண்டும் நந்திபெரு மானே!

9. பூமகளும் இந்நாட்டில் நன்றாக விளைவாள்
புஞ்செயுளார் அரசனெனக் களைகளையே களைவார்
மாமரங்கள் கனிகொடுக்கும் குயிலமர்ந்து கூவும்
மருது, மா, தென்னையிலே கவிக்குலங்கள் தாவும்
பூமரங்கள்,செடிகொடிகள் மலர்ந்து களிக்கும்
புரிசையிலே ஆடுகொடி விருந்தினரை அழைக்கும்
நாமகளார் மகிழ்ந்துறையும் வேந்த நகர்க் கோனே!
நல்லவழி விட வேண்டும் நந்திபெரு மானே!

10. தாரகமாய் இந்நாட்டில் நன்னெறிகள் ஓங்கச்
சன்மார்க்கம் தவிர்த்தபிற புன்மார்க்கம் நீங்க
ஈரமிகு நெஞ்சினரே இந்நாட்டை ஆள
இராக்கதமும், கொலைவெறியும் பகையுணர்வும் மாள
வீரத்திலும் உயிரிரக்கம் மக்களிடம் பூக்க
வேந்தர்களும் நாடுகளும் நல்லறத்தைக் காக்க
நாரதர்போல் இசைஞருறை வேந்த நகர்க் கோனே!
நல்லவழி விட வேண்டும் நந்திபெரு மானே!

**அச்சிட்டோர் : சூர்யா பிரிண்ட் சொலூசன்ஸ்**
534 -ஏ, காமராஜர் சாலை, சிவகாசி - 626123.
போன்:04562-223315 இ.மெயில் suryaprint1998@gmail.com

கதை, கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனையே. கதை, கட்டுரை, கவிதை முதலியவற்றைத் திருத்திஅமைக்கவும் கடிதங்களைச் சுருக்கவும் ஆசிரியர்க்கு உரிமை உண்டு. குரலில் வெளியிடப்பெறும் செய்திகளுக்கும் கருத்துகளுக்கும் அவற்றை எழுதியவர்களே பொறுப்பாவார்கள். பதில் சொல்ல கடமைப்பட்டவர்கள் ஆவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம். - பதிப்பாசிரியர்


ஆதிகாலத்து
அலங்கார மாளிகை
1936
ஆதிகாலத்து
அலங்கார மாளிகை
பொன்னமராவதி | புதுக்கோட்டை
பட்டின் அற்புத படைப்புகள்
வர்ணதாரா
ஹம்சத்வனி

உ
வாழ்க வளமுடன்

Prop.
ALM. Natarajan

Estd : 2000

VSI

96795 57006
90959 06510

GSTIN : 35ABPPN2543RIZX



# வினாயகா ஸ்டீல் இண்டஸ்ட்ரீஸ்
# VINAYAGA STEEL INDUSTRIES

**MFG. OF ALL TYPE STEEL FURNITURE & FABRICATIONS**

Plot No. R/56, Industrial Estate, Dolly Gunj, Port Blair - 744 103

Prop.
ALM. Natarajan

Estd : 1994

VA

96795 57006
90959 06510

# வினாயகா ஏஜென்ஸி
# VINAYAGA AGENCY



Commercial Wet Grinders & Motors, Mixer Grinder,
Table Top Grinder, Mixie, Feather Cleaning Machine.

3 & 4, MB No. 195, MG Road, Junglighat, Port Blair - 744 103.

Book Post - Printed Matter

To

From

அ.வ.ந. கல்வி வளர்ச்சிக் கழகம்
3, முதல் குறுக்குத் தெரு,
அழகப்பா காம்ப்ளக்ஸ் பின்புறம்,
மெயின்ரோடு ரோடு, **பொன்னமராவதி,**
புதுக்கோட்டை மாவட்டம் - 622 407.

SURYA SVK Cell : 98421 24415